# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

**Vol. IV Issue 6 September 2014**

இம்மாத மலரில். . .

## பொருளடக்கம்

பக்கம்


லைப் டிவைன் . . . . . . . . . . . . . 2

இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 8

சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . 9

யோக வாழ்க்கை விளக்கம். . . . . . 11

பூரணயோகம் - முதல் வாயில்கள். 13

பொன்னான நேரங்கள் . . . . . . . . 15

அன்பர்களின் அன்றாட வாழ்வில்
அன்னையின் பிரத்யட்சம். . . . . 26

அன்பர் அனுபவம் . . . . . . . . . . . 47

அஜெண்டா . . . . . . . . . . . . . . . 49

**அன்னை இலக்கியம்**

காலன் கரைந்தான் . . . . . . . . . 51

பக்குவமான பவித்திரம். . . . . . . . 63


**ஜீவியத்தின் ஓசை**

*வாழ*
*முடியாதவனுக்கு*
*வாழ்வே யோகம்*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.


வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## XXVII. The Sevenfold Chord of Being

Page 263
Para 3

Mind, Life and Matter are a triple aspect of these principles.

They work in subjection to the principle of Ignorance.
They are also subject to the apparent self-forgetfulness of the One.
They are subject to the One in its play of division and multiplicity.
Really, these three are subordinate powers.
They are powers of the divine quaternary.
Mind is a subordinate power of Supermind.
Mind takes its stand in division.
It forgets the oneness behind.
It can return to oneness by re-illumination from the supramental.
Life is a subordinate power of the energy of Sachchidananda.
It is Force working out form.
It is working out the play of conscious energy.
This is from the standpoint of division created by Mind.

Matter is the form of substance of being.



## 27. சப்த ஜீவன்

மனம், வாழ்வு, ஜடம் என்பவை இத்தத்துவங்களின் மூவகை அம்சமாகும்.
இவை அறியாமை எனும் விதிக்குட்பட்டுச் செயல்படுகின்றன.
மேலும் இவை ஏகனின் வெளித்தோற்றமான தன்னை மறந்த நிலைக்கும் உட்பட்டுள்ளன.
இவை ஏகனின் பிரிவினை மற்றும் பன்மை எனும் லீலைக்கும் உட்பட்டுள்ளன.
உண்மையில் இம்மூன்றும் கீழ்ப்பணியும் சக்திகளாகும்.
இவை நான்காம் நிலை தெய்வீக சக்தியாகும்.
மனம் தாழ்ந்த, சத்திய ஜீவியத்தின் சக்தியாகும்.
மனம் பிரிவினையை முடிவு செய்கிறது.
அது பின்னுள்ள ஒற்றுமையை மறந்துள்ளது.
அது சத்திய ஜீவியத்திலிருந்து இழந்த ஒளிவிளக்கத்தை மீண்டும் பெற்றால் ஒற்றுமைக்குத் திரும்ப முடியும்.
வாழ்வு சச்சிதானந்தத்தின் திறனுக்கு அடிபணியும் சக்தியாகும்.
அது தோற்றத்தை உருவாக்கும் சக்தியாகும்.
அது தன்னையுணர்ந்த சக்தியின் லீலையைச் செயல்படுத்துகிறது.
அது மனத்தின் பிரிவினைக்குண்டான இடத்திலிருந்து அதைச் செய்கிறது.
ஜடம் என்பது ஜீவனின் – சச்சிதானந்தம் – பொருளின் ரூபம்.

Sachchidananda assumes this form when subjecting itself.

It subjects itself to the action of its own consciousness and force.

Page 263
Para 4

There is a fourth principle.
It comes into manifestation at the nodus of mind, life and body.
It is that nodus we call the soul.
But this has a double appearance.
In front is the desire-soul.
It strives for the possession and delight of things.

Behind concealed by the desire soul is the true psychic entity.
This is the real repository of spiritual experiences.
We conclude that this fourth human principle is a projection.
It is an action of the third divine principle of infinite Bliss.

But this action is in terms of our consciousness.
It is under the conditions of soul-evolution in this world.
The Divine is by nature an infinite consciousness.

Its existence is the self-power of that consciousness.
So also, the nature of its infinite consciousness is pure.

It is an infinite Bliss.



தன்னை அளவுக்குட்படுத்தும்பொழுது, சச்சிதானந்தம் இந்த ரூபத்தைப் பெறுகிறது.
அது தன்னை தன் ஜீவியம் மற்றும் சக்தியின் செயலுக்கு உட்படுத்துகிறது.

நான்காம் விதி ஒன்றுளது.
அது மனம், வாழ்வு, உடலின் சிக்கலான இடத்தில் வெளிப்படுகிறது.
அதை நாம் ஆத்மா என்கிறோம்.
ஆனால் அது இரட்டைத் தோற்றத்தைக் கொண்டது.
மேலேயிருப்பது அகந்தை.
அது பொருட்களின் உடைமை மற்றும் ஆனந்தத்திற்காகப் போராடுகிறது.
அதன்பின் ஒளிந்திருப்பது உண்மையான சைத்தியத்திற்குரிய ஜீவன்.
ஆன்மீக அனுபவங்களுக்கு இதுவே உண்மையான உறைவிடம்.
இது மனிதனுக்குரிய நான்காம் தத்துவத்திற்கான வெளிப்பாடு என்று முடிவு செய்கிறோம்.
இது மூன்றாம் இறை விதியான அனந்தமான ஆனந்தத்திற்கான செயல் ஆகும்.
ஆனால் இச்செயல் நம் ஜீவியத்துடன் தொடர்புடையது.
உலகில் ஆத்ம பரிணாமம் ஏற்படும் பொருட்டு அது உள்ளது.
இறைவன் இயல்பாகவே அனந்தமான ஜீவியத்தைக் கொண்டவன்.
அந்த ஜீவியத்தின் சுய சக்தியால் அதன் இருப்பு உள்ளது.
அதுபோல், அந்த அனந்த ஜீவியத்தின் தன்மையும் தூய்மையானது.
அது ஒரு அனந்தமான பேரின்பம்.

It is an infinite self-possession and self-awareness.

These qualities are the essence of its self-delight.
The cosmos also is a play of this self-delight.
The delight of that play is entirely possessed by the Universal.
In the individual it is held back.
This is because of the action of ignorance and division.

The delight is held back in the subliminal and superconscient being.
It lacks on our surface.
It has to be sought for.
It has to be found and possessed.
It can be found by the development of the individual consciousness.
This development is towards universality and transcendence.

Page 263
Para 5

We may pose 8 principles instead of 7.
We see that our life is a refraction of the divine existence.

This refraction is in inverted order of ascent and descent.

| | | |
|---|---|---|
| Existence | – | Matter |
| Consciousness-Force | – | Life |
| Bliss | – | Psyche |
| Supermind | – | Mind |



அது தன்னைச் சுயமாகப் பெற்றதும், அறிந்ததுமான ஒரு அனந்தமான நிலை.
இக்குணங்கள் அதன் சுய ஆனந்தத்தின் சாரமாகும்.
பிரபஞ்சமும் அந்த சுய ஆனந்தத்தின் லீலையாகும்.
அந்த லீலையின் ஆனந்தத்தை அகிலம் முழுவதுமாகப் பெற்றுள்ளது.
ஜீவாத்மாவில் அது மறைக்கப்பட்டுள்ளது.
அறியாமை, பிரிவினை இவற்றின் செயல்பாடுகளினால் அது மறைந்துள்ளது.
ஆனந்தம் அடி மனக் குகையிலும், மேலுள்ள பரமாத்மாவிலும் மறைக்கப்பட்டுள்ளது.
அது மேல் மனத்தில் இல்லை.
அதற்கு நாம் விழைய வேண்டியுள்ளது.
அதைக் கண்டுபிடித்து அடைய வேண்டியுள்ளது.
அதை நம் ஜீவியத்தை உயர்த்துவதன் மூலம் அடையலாம்.

இம்முன்னேற்றம், பிரபஞ்சம், கடந்தது இவைகளை அடைவதற்கான பாதை ஆகும்.

நாம் ஏழு தத்துவங்களை எட்டாக பாவிக்கலாம்.
தெய்வீக வாழ்வின் வக்கரிப்பான நிலை மனித வாழ்வு என்று பார்த்தோம்.
ஏற்றத்திலும் இறக்கத்திலும் இது தலைகீழாக உள்ளது.

| | | |
|---|---|---|
| சத் | – | ஜடம் |
| சித் | – | வாழ்வு |
| ஆனந்தம் | – | சைத்தியம் |
| சத்திய ஜீவியம் | – | மனம் |

## இம்மாதச் செய்தி

# வாழ்வே நரகமானால் உலகம் சுவர்க்கமாகும்.



## சாவித்ரி

**Page 164: Serves earthly interest and creature joys**
**மண்ணாசையும், பெண்ணாசையும் பொன்னாசையாகி**

- ✡ பெருமைப்படும் சிறுமை தன் வழியைப் பாராட்டியது
- ✡ ஜீவியம் உலகில் பிறந்ததிலிருந்து
- ✡ புழுவிலும், மனிதனிலும், மனிதக் குரங்கிலும் வாழ்வு ஒன்றே
- ✡ வாழ்வென்பது வாழ்வே, பாதையும் பொது, விஷயமும் பொது
- ✡ புதிய ரகமெழுந்தால், வளம் பெருகி மிளிர்ந்தால்
- ✡ எண்ணம் சேர்கிறது, சிக்கலான பொறுப்புளது
- ✡ கொஞ்சம் கொஞ்சமாக தேஜஸ் வளர்கிறது
- ✡ மனிதனிலும் கயமையுண்டு, சிறுமையும் உண்டு
- ✡ கெட்டலைந்த பொழுதும் மொத்த விஷயமும் தொடர்கிறது
- ✡ அவன் சிறு வெற்றிகள் அவனது ஆத்ம தோல்விகள்
- ✡ சின்ன ஆசைகள் கவலையாக மாறுகின்றன
- ✡ பாடும் அவதியும் அவன் கடமையான பங்கு
- ✡ வாழ உரிமையுண்டு, அதுவே மரணத்தின் முடிவான பலன்
- ✡ சோம்பேறி வளர்ந்து ஜடமாக இருளாகப் பூரணமானான்
- ✡ மரணம் போன்ற உறக்கம் அவன் பெற்ற ஆழ்ந்த அமைதி
- ✡ சிருஷ்டிக்கும் சக்தியின் சிறுவண்ணச் சிறப்பு
- ✡ மென்மையான மனிதனின் கடமைகளைப் பூர்த்திசெய்யும் ஆர்வமது

✡ ஆண்டவனின் ஆர்வத்தையும் மீறிக் கடந்தது

✡ தெய்வத் திருநடனத்தை அவன் கனவாகக் கண்டான்

✡ மதுவின் மயக்கம் மகிமையாகி

✡ ஆத்மாவைக் கிழித்தெறியும் உன்னதமான சிங்கம்

✡ தளர்ந்த உடலும், தவறும் இதயம் வழி

✡ இனிய இன்ப வேதனையான வேகம்

✡ அர்த்தமற்ற ஆர்ப்பாட்டம் ஊக்குவித்து விரயம் செய்யும்

✡ வளரவும் வாழவும் பெற்றது சக்தி

✡ சிறுமை குறுகி வறுமையாகி

✡ பல்வேறு பரிசுகளை கொஞ்ச காலம் பெற்று

✡ வெறுப்பும், பொறாமையும் அன்புடன் கலந்து

✡ பலதரப்பட்ட காரியங்களினூடே ஸ்பர்சித்த நட்பு

✡ சுருங்கும் வாழ்வின் திட்டம் வழி எழுந்த இதயக் கமலம்

✡ பெரியது விழித்தால் அது வலுவிழந்து நிற்கும்

✡ ஆனந்த உயர்வு தரும் அதிகபட்ச படபடப்பு

✡ க்ஷணத்தில் அழிவதற்கு அமரத்துவம் தர எண்ணும்

✡ கலையின் பிரகாசமான கதிர் அவன் கண்களின் ஜோதி

✡ தேவகானம் அவனுணர்ச்சிக்கு அதிர்ச்சி தரும்

**ஜீவிய மணி**

***மற்றவனை மடையனாக அறியும் நேரம் மடையன் தன் மகிமையை உணர்ந்து மகிழ்கிறான்.***



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/11. அருளில்லாமல் ஆர்வமில்லை.
### "அவனருளாலே அவன் தாள் வணங்கி"

- ஆர்வம் எழ சக்தி, தெம்பு வேண்டும்.
- தெம்பு உடல் நலத்தாலிருப்பது போல் உள்ள உறுதியா-லிருப்பது.
- நம் கையிலில்லாதது அருளுக்குரியது.
- அருள் காரணமின்றி செயல்படும்.
- சூழல் தேவைப்படாமலும் அருளிருக்கும்.
- நமக்கு அருள் தேவைப்படுவதை மனிதன் அறிவான்.
- அருளுக்கு நாம் தேவைப்படலாம் எனத் தோன்றுவதில்லை.
- கன்று பால் குடிக்க ஓடி வருகிறது.
- மடி கனப்பதால் பசு கதறுகிறது.
- கன்று தாயைத் தேடுவது போல் தாயும் கன்றைத் தேடுவது இயல்பு.
- உலக சட்டத்தை இயக்க அருள் செயல்படுவதுண்டு.
- தங்கையைக் கற்பழித்தவனைக் கொன்றவன், அவனுக்குப் பிறந்த குழந்தைக்குப் பெரும் சொத்து சம்பாதித்துக் கொடுத்தது கர்மவினை. எனினும் அதை நிறைவேற்றியது அருள்.
- லிஸ்ஸிக்கு டார்சியை எந்தக் கர்மமும் பெற்றுத் தரவில்லை. அது முழு அருளின் செயல்.
- அருள் சூழலிலிருந்தால் ஆத்மாவில் ஆர்வம் எழுகிறது. அது இல்லாமல் ஆர்வம் எழுவதில்லை.
- ஆன்மீகச் சட்டப்படி சீதையை இராவணன் தூக்கிப் போனதும், சிகண்டி பீஷ்மரைக் கொன்றதும், திரௌபதியின்

மானம் பங்கப்பட்டதும், நாட்டிலேயே அளவுகடந்த இலஞ்சம் ஹைகோர்ட் நீதிபதி வாங்கியதும், அவரை எதிர்த்து பார்லிமெண்டில் ஒரு வோட்டும் போடாததும் அருளின் செயல் எனில் அதை அறிவது

- அனைத்தையும் அறிவதாகும்.
  அதாவது பிரம்மத்தை அறிவதாகும்.
- அறிவு என்பது அருளை அறிவதாகும்.
- ஆர்வமே அருளுக்கு அடிப்படையெனில் ஆர்வம் எழுவதை அறிவது அருளை அறிவதாகும்.
- அனைத்தும் கைவிட்டபின் கைவிடாத அருளின் செயலை அறியும் அறிவு உண்டா?
- அது அறிவா ஞானமா?
- கைவிட முடியாதது அருள் எனில் ஏன் கைவிட முடியாது என்பது கேள்வி.
- கேள்வி எழுந்தால் அருள் செயல்படாது. கேள்வி எழுந்ததும் செயல்பட மறுக்காத அருள் பேரருளாகும்.
- அருளே முடிவானதெனில் பேரருள் எப்படி வேறுபடும்?
- பகவான் இறைவனைக் கேட்டுப் பெற்ற வரம் அருளானால், அது தன்னை நிறைவேற்ற ஏன் நிபந்தனை விதிக்க வேண்டும்?
- அருளை அறிவது ஆண்டவனை அறிவது.
- அருள் ஆனந்த பிரம்மம்.


**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஆயிரம் ஆண்டுகட்கும் இலட்சக்கணக்கான உள்ளங்களை ஊடுருவும் கல்வியைக் கதை அளிக்கவல்லது.




## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### *104.* மச்சம் மறைவது, மரு உதிர்வது

- பள்ளியில் SSLC சர்டிபிகேட்டில், மாறாத உடல் அம்சங்களை அடையாளமாகக் குறிப்பிடுவார்கள்.
- உடல் ஊனம், காயம் பட்ட வடு, மரு, மச்சம் போன்றவை அவை.
- அன்னையை அறிந்தபின், அவரை மட்டும் மனத்தால், உணர்வால், செயலால், ஜீவனால் ஏற்றபின் ஒளி நம்மை ஊடுருவும்.
  மனத்தின் ஐயங்கள் தெளிவாக மாற ஆரம்பிக்கும், உணர்வின் பிணக்குகள் உள்ளூர ஜீவனை இழக்கும்.
- உடலை ஒளி தொட்டால், உள்ள வியாதி குறையும், உடல் உறுதி பெறும்.
  அதனால் கருமை குறையும், மச்சம் மறையும், மரு உதிறும்.
- இவை பூரண யோக வாயில் திறக்கும் அறிகுறிகள்.
- நாட்டில் சுபீட்சம் வளரும்பொழுது அது நல்ல ரோடு, அதிகப்படிப்பு, ஏழைகட்கு தெளிவான ஆரோக்கியமாகத் தெரிகிறது.
- பட்டினியால் வரும் நோய்கள் நல்ல சவரட்சணையால் விலகுவது போல் இருளால் எழும் வியாதி, ஒளியால் விலகுவது இயற்கை.
- மச்சம் மறைவது என்பது வாழ்வில் அறியாத அனுபவம். வயதாகும்பொழுது மச்சம் கருமையால் தெளிவுபடும். தெளிவு என்றால் கருமை அதிகமாவதாகும்.
- வயதானால் தோல் சுருங்கும், நடை தளரும், முடி நரைக்கும். இவை இயல்பானவை. மச்சத்தின் கருமை குறைந்து

மறைவது இயல்புக்கு எதிரானது. பூரண யோகம் வாழ்வை தளர்ச்சியினின்று விலக்கும்.

- வயது 60-ஐக் கடந்தால், 70-ஐ எட்டும்வரை பல் ஆட்டம் கண்டு விழுவது இயற்கை. பல் வலுப்படுவது எதிரான செயல், இயற்கையில் இல்லாதது.
- வயோதிகம் நினைவின் திறனைக் குறைக்கும்.
  வயோதிகம் நினைவை தெளிவுபடுத்துவது இயற்கையில் இல்லாதது.
- மரம் பழுப்பது குறைவது தலை மாறுவது எனப்படும்.
- தென்னை 70 அல்லது 80 வயதுவரை இருப்பது இயல்பு.
- ஆனால், வயதானால் காய்ப்பு குறையும், காய்ப்பு வளராது.
- கையெழுத்து ஒருவர் சுபாவத்தை வெளியிடும்.
- இத்துறையில் நிபுணர்கள் கையெழுத்தைச் சோதனை செய்து ஒருவர் வயதை நிர்ணயிக்கின்றனர்.
  60 வயதானவர் எழுத்து 59 முதல் 62 வரை நிர்ணயிக்கும்.
  வயது வளரும் பொழுது எழுத்தின் தெளிவு அதிகப்படாது.
  இயற்கைக்கு எதிரான செயல்கள் (involution changes into evolution) பரிணாமம் வளர்வதைக் காட்டும்.

## ஜீவிய மணி

உன்னைப் பொறாமையால் அழித்து ஆனந்தம் பெற விரும்புபவன் நோக்கம் உனக்கு ஆனந்தம் தரும்பொழுது சத்தியம் ஜீவியம் பெறும்.



# பொன்னான நேரங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி

சொற்பொழிவாற்றியவர்: N. அசோகன்

சொற்பொழிவாற்றிய தேதி: 24. 04. 2014

ஒரு வீடு அல்லது நிலம் விற்கும் பொழுது பேரம் படியாமல் நிறைய சிக்கல்கள் எழுவது நம் எல்லோருக்கும் நன்கு தெரிந்த அனுபவம். நல்ல மார்க்கெட் விலை உள்ள இடத்தில் அமைந்திருக்கும் மூன்று அல்லது நான்கு கிரவுண்ட் பிளாட் வருடக்கணக்காக விற்காமல், இருப்பதுண்டு. அது ஏன் அவ்வளவு தாமதமாகிறது என்று விசாரித்தால் சரியாக பேரம் படியவில்லை. இடத்தின் உரிமையாளர் விலை மிக அதிகமாகக் கூறுகிறார். எவராலும் அவரை இறங்கி வரச் சொல்ல முடியவில்லை. அவரிடம் சரியாக பேசுவதற்குத் தகுந்த ஆள் கிடைக்கவில்லை என்று சொல்வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அம்மாதிரியே கூட்டுக் குடும்பங்களில் வருடக்கணக்காக சொத்துப் பிரிப்பதில் சகோதர, சகோதரிகளுக்குள் உடன்பாடு இல்லாமல் அந்தச் சொத்துக்கள் பாழாகிப் போவதுண்டு. இம்மாதிரி சூழ்நிலையில் விஷயத்தை எடுத்துப் பேசி, அடுத்தவர் கண்ணோட்டத்தில் உள்ள நியாயத்தை மனதில்படும்படி எடுத்துச் சொல்லி, சமரசமான ஒரு உடன்பாட்டை கொண்டுவரும் பேச்சாற்றல் ஏதோ ஒரு சிலருக்குதான் அமையும். ஒரு குடும்பத்திலுள்ள ஏழெட்டு பேர்களுக்கிடையே ஒரு சமரசமான உடன்பாட்டை கொண்டு வருவதற்கே ஒரு பெரிய ஆற்றல் தேவைப்படுகிறது என்றால் 540 ராஜபரம்பரையை சேர்ந்தவர்களிடையே எந்தவித எதிர்ப்போ, கருத்து வேறுபாடோ எழாமல் அழகாக, கச்சிதமாக அவ்வளவு பெரிய வேலையை ஒருவரால் முடிக்க முடிகிறது என்றால் அவரிடம் எவ்வளவு பெரிய பேச்சுத் திறமை இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட திறமை படைத்தவர் பிற்காலத்தில் கவர்னர் பதவி வகித்து ஓய்வு பெற்றார். தான் வாழ்க்கையில்

செட்டிலாகிய பிறகு தனக்கு ரூ.15 கொடுத்து உதவியவரை தேடிப்போய் அவரைக் கண்டுபிடித்து அப்பணத்தைத் திருப்பிக் கொடுக்க முயன்றபோது, அதை அவர் வாங்க மறுத்து உன்னைப்போல் சிரமப்படுபவர்களுக்கு நீ இந்த உதவியைச் செய் என்று அறிவுறுத்தினாராம். அந்த நல்ல அறிவுரையை அப்படியே ஏற்றுக் கொண்டு அவ்வாறே மேனன் அவர்களும் சிரமப்படுபவர்களுக்கு ரூ.15 நிதியுதவி செய்து வந்தாராம்.

இங்கே நான் சொல்ல வந்தது என்னவென்றால், பணம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தவருக்குத் தகுந்த நேரத்தில் அந்தப் பண உதவி கிடைத்தது ஒரு பொன்னான நேரம். அந்த உதவியைச் செய்ய வந்தவருடைய மனமும் பொன்னானது. அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று நினைத்த மேனன் மனமும் பொன்னானது. கொடுத்ததை ஏற்காமல் உன்னைப்போல் உதவி தேவைப்படுபவர்களுக்கு இதைச் செய் என்று சொன்னவர் மனமும் பொன்னானது. இன்று ரூ.15 நமக்கு ஒரு பொருட்டே இல்லை. இந்த ரூ.15-க்கு நாம் இரண்டு கப் டீ தான் வாங்கலாம். ஆனால் 1930-ஆம் ஆண்டு கால அளவில் ரூ.15 என்பது ஒரு பவுன் விலைக்குச் சமமாக இருந்தது. அதாவது அக்காலத்தில் ஒரு சவரனின் விலையே ரூ.15 தான்.

நாம் வாழ்க்கையில் பொன்னைப் பெரிதாக மதிக்கிறோம். ஆனால் மனிதனுக்குப் பொன்னான மனநிலைகள் உண்டு என்பதை நாம் கருத வேண்டும். ஒரு கற்புக்கரசியின் கற்புநெறி பொன் போன்றது. உண்மையில் சொல்லப்போனால் விலை மதிக்க முடியாதது என்றுகூட நாம் சொல்லலாம். ஆரோக்கியமாக இருந்த கணவன் நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாகி, உதவாக்கரையாகி விட்டான். அவருடைய இளமையான மனைவி அவருக்குப் பணிவிடைகளைச் செய்தே காலத்தை ஓட்டுகிறார். குடும்பம் நடத்த வருமானம் போதவில்லை. அக்கம் பக்கத்து வீடுகளில் வீட்டு வேலை செய்து சொற்ப வருமானத்தில் பிழைப்பை நடத்துகிறார். இதைக் கவனிக்கும் அதே தெருவிலுள்ள பணக்காரன் ஒருவன் உன் கணவருக்கு



இவ்வாறு செய்து கொண்டு ஏன் இருக்கிறாய். அவன் உடம்பு தேறப் போவதில்லை. அவன் எழுந்து நடமாடப் போவதில்லை. உனக்கு அழகிருக்கிறது, இளமை இருக்கிறது. என்னுடன் வந்துவிடு. உன்னை ராணி மாதிரி வைத்துக் கொள்கிறேன் என்று ஆசை வார்த்தைகள் கூறும்போது, வீட்டு வேலை செய்தாவது என் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வேனே தவிர, இப்படி உனக்கு விலை போகமாட்டேன் என்று தன்மானத்தோடு பேசும் நேரம் பொன்னான நேரமாகும். உயர்ந்த கற்பு நெறி என்பது நம் இந்திய நாட்டின் கலாச்சாரத்தில் உள்ள ஒரு ஆழமான பண்பாகும். இதைப் பின்பற்றி வாழும் அப்பெண்ணின் வாழ்க்கை ஒரு பொன்னான நேரமாகும்.

வாழ்க்கையில் சில பேருக்குத்தான் சிலது உரியது என்று சொல்லலாம். உதாரணமாக இறை அம்சம் கொண்ட ஆன்மீக மகான்களுக்கு மௌனம் என்பது இயல்பாகவே சித்திக்கும். அடுத்ததாகப் படைப்பாளிகளுக்கு புதிய சிந்தனைகள் தோன்றியபடி இருக்கும். இந்த ரீதியில் பார்த்தால், இயல்பாகவே காதலுக்கு டார்சி உரியவன் என்று நாம் சொல்லலாம். எல்லோ-ருக்கும்தான் காதல் வருகிறது. ஆனால் அவையெல்லாம் நாம் தூய்மையான காதல் என்று சொல்ல முடியாது. நாம் யார்மீது பிரியம் வைக்கிறோமோ, அவர் நம்மீது பதிலுக்குப் பிரியம் வைக்க வேண்டும் என்றுதான் நாம் எதிர்பார்ப்போம். அவருக்கு நாம் ஒரு நல்லது செய்தால், சம்பந்தப்பட்ட அந்த பெண்ணிற்கு அது தெரிய வேண்டும், அவளுக்குச் சந்தோஷம் வந்து அவளுக்கு நம்மேல் காதல் வரவேண்டும் என்றுதான் நினைப்போம். இப்படி எழுகின்ற காதல் சாதாரணமாக பிரதி-பலனை எதிர்பார்க்கும் காதலாகும். ஆனால், டார்சிக்கு எழுந்ததோ இவ்வித காதலில்லை. அவள் இவனை gentleman இல்லை என்றாள், அத்துடன் நிற்காமல் தான் திருமணம் செய்து கொள்ளும் கடைசி ஆள் இவனாகத்தான் இருக்கும் என்றும் கூறினாள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவள் தங்கையின் மானத்தைக் காப்பாற்றி, அவளுக்கு முறைப்படி திருமணமும் செய்து வைத்து, அது லிஸ்ஸிக்கு தெரிய வேண்டிய அவசியமும் இல்லை என்று கூறிவிடுகிறான். டார்சி செய்த உதவியால்தான்

குடும்ப மானம் காப்பாற்றப்பட்டது என்று லிஸ்ஸிக்குத் தெரிந்து, அதனால் அவள் மனம்மாறி, அவன்மேல் காதல் கொண்டால், அதில் அவனுக்கு ஒரு பிரயோஜனம் இருக்கிறது. அதுகூட அவளுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. நான் gentleman-ஆக நடந்து கொள்ளவில்லை என்பது உண்மை. தான் மறைத்த உண்மையால், விபரீதம் நடந்துள்ள-போது அதைச் சரி செய்வது தன் பொறுப்பு, அதுதான் gentleman-க்கு அடையாளம். எனவே நான் அதைச் செய்கிறேன் என்று அவன் முன்வந்தானே தவிர, சம்பந்தபட்ட லிஸ்ஸிக்கு அது தெரிவதே இரண்டாம்பட்சம் ஆனது. அதாவது அவள் சந்தோஷப்பட வேண்டும். தன்னால்தான் அந்தச் சந்தோஷம் வந்தது என்று அவளுக்குத் தெரியத் தேவையில்லை என்ற மன நிலைக்கு அவன் வந்து விட்டான். இதைத்தான் உண்மை-யான self-giving என்கிறோம். மேலும் திட்டு வாங்கும்போது அவனுக்கு கோபமே வரவில்லை. மாறாக அவள் கூறியதில் உண்மை இருக்குமோ என்று தோன்றியது. அந்த உண்மையை ஏற்று உண்மையிலேயே மனம்மாறி, அவள் குடும்பத்திற்கு வந்த இக்கட்டிலிருந்து அவளைக் காப்பாற்றி, அந்த வகையில் அவளை மகிழ்விக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றிய நேரம் அவன் வாழ்வில் ஒரு பொன்னான நேரம்.

மேல்நாட்டு இலக்கியங்களில் காதல் பிரசித்தமான ஒன்று. ஷேக்ஸ்பியரின் tragedies-ஐ எடுத்துக் கொண்டால் ஒத்தல்லோ-வும், ரோமியோ மற்றும் ஜூலியட் இரண்டுமே காதலை மையமாக வைத்த நாடகங்கள்தான். Desdemona-விற்கு, ஒத்தல்லோ மீதிருந்த காதல் அவ்வளவு புனிதமானது. இருந்தாலும், இந்தக் காதலின் புனிதத்தை அவன் உணரவே இல்லை. அவள் கழுத்தை நெரித்துக் கொலைதான் செய்தான். ரோமியோ மற்றும் ஜூலியட் இடையில் அரும்பிய காதல் மிகவும் தீவிரமான காதல். ஆனால் விரோதமனப்பான்மை கொண்ட இரு குடும்பத்தாரிடையே இளைய தலைமுறை-யினருக்கு அரும்பிய காதல் வளர்ந்து, தழைக்கவே வழியில்லை. ஆகவே அப்படி அரும்பிய காதல் மடிந்து போகிறது. இந்திய இலக்கியங்களில் பார்த்தால், காதலைவிட கற்பிற்கே அதிக



முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது யாருடைய மனதிலாவது தெய்வீக-மான காதல் பிறந்தால், அதை ஏற்றுக் கொள்ளக்கூட இன்னொருவர் கிடைக்க மாட்டார் என்று தெரிகிறது. டார்சிக்கு வந்த காதல் அப்படிப்பட்ட ஒரு தெய்வீகக் காதலாகும். அதில் ஒட்டிக்கொண்டு இருந்த சிறிதளவு சுயநலத்தைக்கூட அவன் தியாகம் செய்து விடுகிறான். ஆனால், அந்தக் காதலுக்குரிய-வளோ பெம்பர்லி மாளிகையைக் கண்டு பரவசப்பட்டுப் போகிறாள். அவளுடைய மனநிலை அவ்வளவு சாதாரணமாக இருந்தது. அவள் சாதாரணமாக இருக்கிறாளோ இல்லையோ, அவளை மகிழ்விப்பதில் அவன் நாட்டம் கொண்டான். இப்படி அவனுக்குத் தோன்றிய நேரம் அவன் அக வாழ்வில் அவனுக்கு ஒரு பொன்னான நேரம்.

தெய்வீகக் காதலை வேறெங்காவது பார்க்க வேண்டும் என்றால் பகவானின் சாவித்ரி காவியத்தில் நாம் அதைப் பார்க்கலாம். இறந்துபோன தன் கணவனின் உயிரை எமனிட-மிருந்தே சாவித்ரி மீட்கிறாள். பூமாதேவியின் ஆன்மாவாக சத்தியவானை சித்தரித்து, சூரிய புத்திரியான சாவித்ரி அவனை மணப்பது, சத்திய ஜீவியம் பூவுலகிற்கு வர வழி செய்கிறது என்பது சாவித்ரி காவியத்தின் நோக்கம். ஒருவகையில் பார்த்தால், சாவித்ரியில் வெளிப்படும் காதலை divine romance என்றுகூடச் சொல்லலாம். வாழ்க்கையில் சில சமயங்களில் அதிர்ஷ்டம் என்பது வலுக்கட்டாயமாக நம்மேல் திணிக்கப்-படுவதுண்டு. உதாரணமாக சுதந்திரத்திற்கு முன்னால் தமிழ் நாட்டில் இருபெரும் காங்கிரஸ் தலைவர்களுக்கிடையே போட்டி எழுந்தபோது இடையில், எந்தப் பிரசித்தமும் இல்லாத சாதாரண தொண்டராக இருந்த காமராஜர் அவர்கள் TNCC பிரசிடெண்ட்டாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இது அவர் எதிர்-பார்க்காத ஒன்று. அம்மாதிரியே விருதுநகரில் வீட்டிலிருந்து துரத்தப்பட்டு பாக்கெட்டில் எட்டணாவுடன் மட்டுமே சென்னைக்கு வந்த ஒருவர், வியாபாரத்தில் ஈடுபட்டு சென்னையில் ஒரு பெரும் வர்த்தகப் புள்ளியானார். இப்படி வீட்டை விட்டு துரத்தப்படும்பொழுது, இப்படித்தான்

அதிர்ஷ்டம் அவரைத் துரத்துகிறது என்று அவருக்குத் தெரியுமோ? கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட அரசியல்வாதி ஒருவர் உடனடியாகத் தனிக்கட்சி ஆரம்பித்து, அடுத்த தேர்தலில் அவரே முதன் மந்திரியானார். கட்சியிலிருந்து நீக்கப்படுவது என்பது அவமானம். அந்த அவமானத்திற்குப்பின் பெரும்புகழ் மறைந்துள்ளது என்பது அவருக்குத் தெரிந்திருக்குமா? இப்படி அதிர்ஷ்டம் நம்மை வலுக்கட்டாயமாகத் தேடிவருகின்ற இடங்களில் எல்லாம் சம்பந்தப்பட்டவர் வாழ்க்கையில் அவை பொன்னான நேரமாகும்.

வாழ்க்கையில் அதிர்ஷ்டம் ஒருவரை நாடி வர முடிவு செய்துவிட்டால், அதை அவர் அறியாதிருக்கும்போது, வலுக்கட்டாயமாக அதிர்ஷ்டம் இப்படித்தான் அவர் வாழ்க்கையில் புகுந்து வரும். தகப்பனார் இறந்து போனால், லாங்பர்ன் எஸ்டேட் காலின்ஸ் கைக்குப் போய் குடும்பமே நிர்க்கதியாக நிற்க வேண்டிய பரிதாபத்திற்குரிய ஒரு நிலைமை வரும். அப்படிப்பட்ட ஒரு அவலநிலை அக்குடும்பத்திற்கு வரக் கூடாது என்று காலின்ஸ் முடிவு செய்து, பென்னட் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணக்க முடிவு செய்கிறான். நியாயமாகப் பார்த்தால், இதுவொரு பெருந்தன்மையான செயல்பாடாகும். இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு கஷ்டமான சூழ்நிலையில் ஒரு அதிர்ஷ்டமயமான வாய்ப்பு தம்மைத் தேடி வரும்போது, யாரும் அதைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், காலின்ஸ் எலிசபெத்தின் எதிர்பார்ப்பின்படி மரியாதைக்குரியவனாகத் தென்படவில்லை என்பதால், அவள் அவ்வளவு பெரிய அதிர்ஷ்டத்தையும் வேண்டாம் என்கிறாள். வாழ வழியின்றி தவித்துக் கொண்டிருக்கும் எத்தனை பேர் இப்படி ஒரு வாய்ப்பு வந்தால் நழுவ விடுவார்கள்? ஆனால், லிஸ்ஸி இந்தக் காரியத்தைச் செய்திருக்கின்றாள் என்று நாம் பார்க்கிறோம். ஒரு மரியாதைக்கில்லாத ஆண்மகன் மூலம் அதிர்ஷ்டம் வரும்போது அந்த அதிர்ஷ்டத்தையும் மறுக்க பெரிய தைரியமும், அஞ்சா நெஞ்சமும் வேண்டும். அப்படிப்பட்ட அஞ்சா நெஞ்சமும், தைரியமும் லிஸ்ஸியிடம் தென்பட்டது. அந்தத் தைரியத்திற்கு வாழ்க்கை



கண்டிப்பாகப் பெரிய பரிசு அளிக்கும். அந்தத் தைரியத்திற்குக் கிடைத்த பரிசுதான் பெம்பர்லி அவளைத் தேடி வந்தது.

காலின்ஸைவிட, டார்சி ஆண்மகன் என்று பார்த்தால் எவ்வளவோ தேவலை. ஆனால், அவனுடைய பணபலத்திற்குக்கூட லிஸ்ஸி மயங்கவில்லை. தன் சகோதரியின் திருமணத்தைக் கெடுத்து விட்டான் என்ற ஒரே காரணத்தினால், கோடீஸ்வர மணமகனின் திருமண வாய்ப்பையும் ஏற்க மறுத்தாள். மெரிட்டனில் உள்ள எந்தப் பெண்ணிற்கும், கனவிலும் எட்ட முடியாத உயரத்திலிருப்பவன் டார்சி. அவனை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசை வருவதற்குக்கூட, கரோலின் ஒருத்திக்குத்தான் அந்தத் தகுதியும் உண்டு. லிஸ்ஸி, டார்சியை ஆசைப்படும் இடத்திலேயே இல்லை. ஆனால், இவள்தான் திட்டவட்டமாக டார்சியை மணக்க மறுத்துவிடுகிறாள். அவள் ஏன் அப்படிச் செய்தாள், எதை எதிர்பார்த்துச் செய்தாள் என்று கேட்டால், அதற்கெல்லாம் சரியான பதிலே இல்லை. நம் மனம் நியாயத்தை அளவுகடந்து பாராட்டினால், வாழ்க்கை வெகுசிறப்பாக அதற்குப் பதிலளிக்கும் என்று மட்டும் புரிந்து கொள்ளலாம்.

நம் மனம் பொன்னாக இருந்தால் நாம் எதிர்பார்க்காத விஷயங்கள்கூட நம்மைத் தானாக வந்தடையும். அப்படித்தான் டார்சி எலிசபெத்தை வந்தடைகிறான். எதிர்பாராதவருக்கு வாழ்க்கை எப்படியெல்லாம் பரிசளிக்கிறது என்பதற்கு ‘‘கோமதியின் காதலன்’’ என்று தேவன் அவர்கள் எழுதிய நாவலே சிறந்த உதாரணம். இக்கதையில் கதாநாயகன் பெயர் ரங்கராஜன். அவன் ஒரு ஜமீன்தார் குடும்பத்துப் பிள்ளையாவான். அண்ணனிடம் கோபித்துக்கொண்டு சென்னைக்கு ரயில் ஏறி வருகிறான். பஸ் நிறுத்தத்தில் ஒரு ரவுடியிடமிருந்து ஒரு இளம் பெண்ணைக் காப்பாற்றுகிறான். கண்டதும் காதல் என்பார்களே அதுபோல் அவனுக்கு அவளையும், அவளுக்கு அவனையும் பிடித்துப் போகிறது. பஸ் வந்த பிறகு அவள் புறப்பட்டுச் சென்று விடுகிறாள். அதன் பிறகு அவள் யார்? அவள் எங்குச் சென்றாள்? அவளை மீண்டும் பார்க்க முடியுமா?

என்று கேட்டால் சந்தர்ப்பமே இல்லை என்றுதான் பதில் சொல்ல முடியும். ஆனால், இருவர் மனதிலும் எழும்பியது உண்மையான காதல். அதற்கு உயிருண்டு, ஜீவனுண்டு. ஆகவே அது செயல்பட ஆரம்பிக்கிறது. ரங்கராஜன் எங்குப் போவது என்றுகூட தெரியாமல் கால்போன போக்கில் நடந்து போகிறான். எதிரே வருபவருடைய கார் **breakdown**-ஆகி நிற்கிறது. இவனுக்குக் கார் ரிப்பேர் வேலை ஓரளவிற்குத் தெரியும். உதவ முன்வருகிறான். காரும் சரியாகி விடுகிறது. இவனே அதை ஓட்டிக் கொண்டுபோய் கார் உரிமையாளரின் வீட்டில் விடுகிறான். பஸ் நிறுத்தத்தில் எந்தப் பெண்ணைப் பார்த்தானோ அந்தப் பெண் அந்த வீட்டில் இருக்கிறாள். அவளைப் பார்த்தவுடன் அங்கேயே இருந்துவிட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றுகிறது. அதற்கேற்றார்போல் அந்தக் கார் உரிமையாளரும், அவனைப்பற்றி விசாரிக்க, அவருக்கு ஒரு டிரைவர் தேவைப்படுகிறது என்று இவனுக்குத் தெரிந்து அங்கேயே டிரைவர் பணியில் அமர்ந்தும் விடுகிறான். இவன் பார்த்த பெண்ணோ ஜமீன்தார் வீட்டுப் பெண். இவனோ தான் ஒரு ஜமீன்தார் வீட்டுப்பிள்ளை என்பதை மறைத்து, ஒரு சாதா-ரணமானவன்போல் நடந்துக் கொள்கிறான். ஒரு சாதாரண டிரைவர்போல் அவன் நடந்துகொண்டாலும், அவன் மேலுள்ள பிரியத்தை அவள் விடவில்லை. அடுத்தடுத்து பல நிகழ்ச்சிகள் நடந்து, நான்காம்நாள் இவன் ஒரு ஜமீன்தார் வீட்டுப்பிள்ளை என்ற விஷயம் வெளியே வருகிறது. அவனை அழைத்துக் கொண்டு போக வந்திருக்கும் அவனுடைய தந்தையார், கோமதியை அவன் விரும்புகிறான் என்று புரிந்து கொண்டு அவளை முறையாகப் பெண் கேட்டுத் திருமணத்தையும் உறுதிபடுத்திக் கொள்கிறார். இதில் நாம் கவனிக்க வேண்டியது ஒரு பெண்ணைப் பார்த்த நான்காம் நாளே அவளைத் தன் மனைவியாக ஏற்று கொள்ளும் அளவிற்கு வாழ்க்கை அவனுக்கு அதிர்ஷ்டத்தைப் பரிசாக அளிக்கிறது. டார்சியும், இப்படித்தான் எலிசபெத்தைப் பார்த்துவிட்டு, அவளை மணமுடிக்க வேண்டும் என்று விரும்புகிறான். ஆனால், அவனுக்கு இருந்த அகம்பாவம், சுயநலம் எல்லாம் விலகி அதிர்ஷ்டத்தை



அனுபவிக்கும் பக்குவம் வருவதற்கு அவனுக்குப் பத்து மாதங்களாகிறது. ரங்கராஜனோ தான் ஜமீன்தார் வீட்டுப்-பிள்ளை என்பதையே காட்டிக் கொள்ளாமல் சாதாரண ஏழை **driver**-ஆக தன்னைக் காட்டிக் கொண்டாலும், உள்ளத்தால், அவன் சிறப்பானவன் என்பதால் வாழ்க்கை அவன் சுயரூபத்தை நான்கே நாட்களில் வெளிப்படுத்தி அவன் திருமண ஆசையைப் பூர்த்தி செய்து வைக்கிறது.

தாம் வாழ்க்கைக்கு உகந்த மனநிலையை எட்டிவிட்டோம் என்றால், கொடுக்கின்ற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பதைப்போல வாழ்க்கை இருக்கிறன்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளை நமக்குச் சாதகமாக மாற்றி நாம் தேடுவதை கைமேல் பரிசாகக் கொடுப்பதைப் பார்க்கலாம். **P&P**-இல் எலிசபெத், டார்சி உறவைப் பாருங்கள். திருமணம் செய்து கொள்வதாக இருந்தால், நீதான் கடைசி ஆள் என்று அவள் சொல்லிவிட்ட பிறகு ஏறக்குறைய அந்த உறவு முறிந்து விட்டது என்றே சொல்லலாம். ஆனால் அவளிடம் திட்டு வாங்கிய பிறகுதான் அவனே திருந்துகிறான். அவன் திருந்திய பிறகு வாழ்க்கை அவனுக்குப் பரிசளிக்க விரும்புகிறது. அது என்ன செய்கிறது? வேறு எங்கோ உல்லாசப் பயணம் போக திட்டமிட்டிருந்த எலிசபெத்தின் மாமாவின் மனதை மாற்றி, டார்சி இருக்கும் **Derbyshire**-க்கு அவர்களை வரவழைத்தது. இரண்டாவதாக அவன் ஊரில் இல்லை என்று தெரிந்து கொண்ட பின்புதான் அவளே அங்கு வந்தாள். ஆனால், வாழ்க்கையோ திடீரென்று அவன் மனதை மாற்றி ஒருநாள் முன்னதாகவே அவனை ஊருக்கு வரும்படி செய்து எதிர்பாராத வகையில் இருவரையும் சந்திக்க வைத்தது. லிடியா ஓடிப்போய் விட்டாள் என்ற செய்தியைச் சாதாரணமாக அவனிடம் சொல்லக் கூடிய பெண்ணே இல்லை அவள். இருந்தாலும் அவளையும் மீறி அவனிடம் சொல்ல வைத்தது. அது தெரிந்தால், அவன் விலகித்தான் போவான் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவன் விலகிப் போகவில்லை. தன்னைத் திருத்திக்கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றுதான் எடுத்துக் கொண்டான். லிடியாவிற்குத் திருமணம் செய்து வைத்தபின்கூட அவளின்

அன்பை மீண்டும்பெற தனக்குத் தகுதி வந்துவிட்டதாக அவன் நினைக்கவில்லை. அவன் மீண்டும் **proposal** கொடுத்தால், தான் ஏன் மறுக்க வேண்டும் என்று கேத்ரீன் டீ பர்க்கிடம் பேசியது தெரிந்தபின்தான் மீண்டும் **proposal** கொடுத்தால் மறுக்க மாட்டாள் என்ற துணிவு வந்து **proposal**-ஐயும் வழங்கி, தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொண்டான். இந்தளவிற்கு வாழ்க்கை அவனுக்குச் சாதகமாக நிகழ்ச்சிகளை மாற்றியமைத்து இருக்கிறது என்றால், அவனுடைய பொன்னான மனத்திற்கு அப்படியொரு பரிசைத் தந்திருக்கிறது என்றர்த்தமாகிறது.

இப்படி, தான் மீண்டும் **proposal** கொடுத்தால், அவள் அதை ஏற்றுக்கொள்வாள் என்று அவன் உணர்கின்ற நேரம் அவன் வாழ்க்கையில் ஒரு பொன்னான நேரம். நமக்குக் கையில் கிடைக்கும் ஆண்டவனின் பிரசாதம் பார்ப்பதற்கு எளிதாகத்-தான் தெரியும். ஆனால் அதைப் பெறுவதற்குகந்த மன-நிலையில் இருப்பதோ மிகவும் கடினமாகும். உதாரணமாக ராமாயணத்தில் வரும் தேரை மனதில் எந்நேரமும் ராமனைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் தேரைக்குக் கிடைத்தது என்ன? ராமனுடைய பாணம்தான் அதன் முதுகில் குத்தியது. பகவானைத் தேடி அன்னை வந்தபோது இடம் தெரியாமல் ஒரு வழிப்போக்கரை பகவானு-டைய வீடு எது என்று கேட்கிறார். அவரும் இதுதான் என்று பகவானுடைய வீட்டைச் சுட்டிக் காட்டினார். அது என்னவோ ஒரு எளிய செயல்தான். ஆனால் பகவானை அன்னை தரிசித்த நேரம் அவர் வாழ்க்கையில் ஒரு பொன்னான நேரம். பகவானை தரிசித்தபின் அன்னைக்குக் கிடைத்தது என்ன? அன்னை கேட்காமலேயே பகவான் அவருக்கு ஒரு ஆழ்ந்த மௌனத்தைக் கொடுத்தார். அவர் வாழ்நாள் இறுதிவரை அந்த மௌனம் அவரை விட்டு விலகவில்லை. அப்படி ஒரு சிறந்த தெய்வீகமான மௌனத்தை ஒரு நிமிடத்தில் ஒருவரால் அடுத்தவருக்குக் கொடுக்க முடியும் என்றால், அவர் உண்மை-யிலேயே அவதார புருஷர்தான் என்று அன்னை உணர்ந்தார். பகவானைச் சந்தித்துவிட்டு மீண்டும் தன் இருப்பிடம் சென்றவர் அன்று தன் டைரியில் ''பல்லாயிரக் கணக்கான



ஜீவன்கள் உலகில் அந்தகாரத்தில் மூழ்கியிருந்தாலும், நான் கண்டவர் — ஸ்ரீ அரவிந்தர் — உலகில் இருக்கும்வரை இறைவனின் திருவுள்ளம் பூவுலகில் பலிப்பது நிச்சயம்'' என்று குறிப்பிட்டார். இப்படி ஒரு மௌனம் பெற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது அன்னையின் வாழ்வில் ஒரு பொன்னான நேரமாகும். பகவான் பெற்ற ஆன்மீக சித்திகள் எல்லாம் அவருடனேயே தங்கி விட்டிருக்கும். அன்னை அவரிடம் வந்த-பின்புதான் அந்த சித்திகள் எல்லாம் அவருடனேயே நின்று விடாமல் அன்னையின் மூலம் உலகெங்கும் பரவின. ஆகவே அன்னை வந்தது பகவானுடைய வாழ்க்கையில் ஒரு பொன்னான நேரம் என்று கூறலாம். பகவானுடைய பூரண யோகத்தில் சூட்சும பயிற்சிகளுக்கு முக்கிய இடம் உண்டு. அந்தச் சூட்சும பயிற்சிகளையெல்லாம் பகவானிடம் வரும்முன்பே அன்னை தியோன் என்பவரிடம் கற்றுக் கொண்டார். முதலில் அவரைத்தான் தான் கனவில் கண்ட கிருஷ்ணனாகக் கருதினார். பின்பு அவர்தான் **God of death**, மரணத்தின் தலைவன் என்று அறிந்து, அவரை விட்டு விலக ஆரம்பித்தார். சூட்சும உலகில் சஞ்சாரம் செய்யும்போது, 'வாழ்வின் மந்திரம்' என்று சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட ஒரு மந்திரத்தைக் கண்டறிந்தார். ஆனால் அதை தியோனிடம் தர மறுத்து, பதிலாக பகவானைக் கண்டபோது அவரிடமே கொடுத்தார். பகவான் யோகம் செய்-வதற்காக புதுவை வந்தார் என்றாலும், ஆசிரமம் ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதிலில்லை. அந்த எண்ணம் தோன்றி செயல்படுத்தியவர் அன்னைதான். அம்மாதிரியே ஆரோவில்லை நிறுவ வேண்டும் என்று அன்னைதான் முடிவு செய்தார். இப்படித் தன்னிறைவாக வாழ்ந்து கொண்டிருந்த பகவானை, உலகத்திற்குத் தெரியப்-படுத்தி, அவரை உலகத்தின் சொத்தாக மாற்றியவர் அன்னை-தான். அவர் பகவானை முதலில் சந்தித்தது 1914-ஆம் ஆண்டு மார்ச் 29-ஆம் தேதியாகும். நிரந்தரமாக அவருடனேயே வந்து தங்கியது, ஏப்ரல் 24-ஆம் தேதியாகும். இந்த இரு நாட்களும் பகவானுடைய வாழ்க்கையில் பொன்னான நாட்களாகும் என்று நாம் சொல்லலாம்.

முற்றும்.

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

**9. மாதக் காணிக்கை (Prosperity Offerings):**

நம் மரபில் ஏற்பட்ட ஒரு முக்கியமான பழக்கம் தெய்வத்தை வழிபடும் பக்தன் தன் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் தன் வழிபாட்டில் ஈடுபடுத்துகிறான். வழிபாடு முழுமையாக வேண்டி வாயால் துதி பாடி, மனத்தால் பக்தி செலுத்தி, உடலால் உழவாரப்படை பணி போன்ற உழைப்பை நல்கி, தன் கரணங்கள் அனைத்தையும் வழிபாட்டில் பக்தன் ஈடுபடுத்துகிறான். மனத்தால் எவரும் பக்தி செலுத்த முடியும். வாயால் எல்லோராலும் துதி பாட முடியும். ஆனால் கோயிலுக்குப் போகின்ற எல்லோராலும் உடலால் உழைப்பை நல்க வாய்ப்பிருப்பதில்லை. இது சந்தர்ப்பத்தால் ஏற்பட்ட விளைவு.

ஜீவனால் மலர்ந்து தெய்வத்தைத் தன்னுள் அழைப்பது சிறந்தது. அது முடியாதவர்கள் மனத்தால் தெய்வ நாமத்தை உச்சரிக்கின்றார்கள். அதுவும் முடியாதவர்கள் வாயால் நாம ஜெபம் செய்கிறார்கள். உடலால் தெய்வத்திற்குப் பணி செய்தால்தான் உடலின் பங்கு பூர்த்தியாகும். இதைப் பூர்த்தி செய்ய முடியாதவர்கள் தங்கள் உடல் உழைப்பின் பலனைத் தெய்வத்திற்குச் சமர்ப்பித்தால், உழைப்பால் வந்த ஊதியத்தைச் சமர்ப்பணம் செய்தால், உடலால் தெய்வ வழிபாடு செய்ததற்குச் சமமாகும். இதுவே காணிக்கை செலுத்துவதன் ஆன்மீக அடிப்படை.

எந்தக் கரணத்தால் இறைவனைப் பூஜிக்கின்றோமோ, அந்தக் கரணம் அருளால் நிரம்பி வழிகிறது. ஸ்தோத்திரம் பாடி வழிபட்டால், மனம் இறைவனது அருளால் தெளிந்து, விசாலமாகி, புத்தி கூர்மை ஏற்படும். பக்தியால் பரவசப்பட்டால், மன வியாகூலங்கள் விலகி, உள்ளம் பூரித்து, சந்தோஷத்தால் நிறைகிறது. ஒரு கரணத்தால் செய்யும் தொண்டிற்கு மற்றொரு



கரணத்தை நிரப்பும் திறன் இல்லை. ஆங்கிலத்தில் அதிகத் திறமையுள்ள மாணவனுக்கு கணிதத்தில் அதனால் மார்க் வாராது. கணிதத்தில் அவன் வாங்கிய 12 மார்க் 42-ஆக வேண்டுமானால், அவன் தன் நேரத்தைக் கணிதப் பயிற்சியில் செலவிட வேண்டும். கணிதத்தில் மார்க் குறைவாக இருப்பதால், ஆங்கிலப் புத்தகங்களை அனுதினம் படித்தால், அது கணிதத்திற்குப் பயன்படாது.

பொருள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது. பொருளை ஈட்டுவது உடலும், அதன் உழைப்பும். பக்தன் தன் வருமானம் பெருக வேண்டுமென அன்னையிடம் பிரார்த்தனை செய்தால், அவன் அன்னைக்கு உடலால் சேவை செய்ய வேண்டும். அதுவே அவனுக்கு நேரிடையாக உதவுவது. அதற்கு நேரிடையாக உதவ, அவனது உடலால் அன்னைக்குச் செய்யும் சேவை. இந்தச் சேவையின் உட்கருத்தை அறிந்து, தான் செய்யும் சேவை அன்னைக்குச் சேரும்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்வது எப்படி என்பதை ''சேவை'' என்ற கட்டுரையில் விளக்கியிருக்கிறேன். எல்லோராலும் அதைச் செய்ய முடிவதில்லை. நேரடியாக தியான மையம் வந்து சேவை செய்வதும் எல்லோராலும் செய்யக்கூடியதில்லை. அன்னையின் பிரதாபங்களைச் சொல்லும் புத்தகங்களை ஏராளமாக விற்று, அதனால் தனக்கிருந்த ஏழரை நாட்டுச் சனியனின் தரித்திரத்தைப் போக்கி, அபரிமிதமாக வளம் பெற்றவர்கள் பலருண்டு. அதுவும் எல்லோராலும் செய்ய முடிவதில்லை. எதுவும் முடியாதவர்களுக்கு உகந்தது காணிக்கை. இதன் சிறப்பை விளக்க ஒன்றைக் குறிப்பிட்டால் போதும். ஆசிரம டிபார்ட்மெண்ட்களில் புதிய வேலை ஆரம்பிக்கும்பொழுது அன்னைக்குக் காணிக்கை செய்வது உண்டு.

ஜனவரி முதல் தேதியை வருஷத்திற்கு **(prosperity day)** சுபிட்ச தினம் என அன்னை கூறுகிறார். ஒவ்வொரு மாதமும் முதல் தேதி அன்று சாதகர்கட்கு அன்னை அவர்களுடைய தேவையை தாமே வழங்கி, தரிசனம் கொடுத்து, அனுக்கிரஹம் செய்ததுண்டு. அதனால் மாதம் முதல் தேதிக்கு சுபிட்ச தினம் **(prosperity day)** எனப் பெயர். இதெல்லாம் கருதியே அன்பர்கள்

தங்கள் மாத வருவாயில் ஒரு பகுதியை அன்னைக்கு முதல் தேதியன்று அனுப்பி வைப்பது வழக்கம். ஓர் அன்பர் வேலை செய்த ஸ்தாபனத்தில் சம்பளத்தை 7 முதல் 10 தேதிவரையில் ஒரு பகுதியையும், 15 முதல் 20 தேதியில் அடுத்த பகுதியையும் கொடுப்பது நீண்ட கால வழக்கமாக இருந்தது. அங்கிருந்து ஆசிரமத்திற்கு ஓர் அன்பர் வர ஆரம்பித்தார். தம் ஊதியத்தில் ரூ.10-ஐ காணிக்கையாக அனுப்பினார். அதே மாதம் ஸ்தாபனத்தின் தலைவர் மாறினார். அவர் செய்த முதல் வேலை சம்பளம் சம்பந்தமானது. ‘‘சம்பளத்தைத் தாமதப்படுத்திக் கொடுப்பது சரியில்லை. இந்த மாதத்திலிருந்து சம்பளத்தை முழுவதுமாக முதல் தேதி மாலை கொடுத்துவிட வேண்டும்’’ என்று கூறி, அதை நிறைவேற்றினார். அன்பர் சில மாதங்களுக்குப் பின் தம் காணிக்கையை ரூ.20-ஆகச் செய்தார். அதே மாதம் சர்க்கார் புதிய சட்டம் போட்டு, அதுபோன்ற ஸ்தாபனங்களுக்கு சர்க்காரே நேரடியாகச் சம்பளம் வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. அன்பருக்கு ஒரு மாதமாவது தம் முழு ஊதியத்தையும் அன்னைக்குக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும் என்று ஆவல். ஓராண்டு கழிந்து அது முடிவு பெற்றது. தம் ரூ.188.75 சம்பளத்தைக் காணிக்கையாக அந்த டிசம்பரில் செலுத்தினார். அடுத்த டிசம்பரில் அவர் தினமும் ரூ.188.75 செலவு செய்யும் ஸ்தாபனத்தின் தலைவராகி, தம் வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போய்விட்டார். 3 ஆண்டுகளுக்குப்பின் அவரது குடும்பத்தில் தினமும் ரூ.188.75 செலவாகும் நிலைக்குப் போய்விட்டார்.

மாதக் காணிக்கையாக 1 நாள் ஊதியம் கொடுப்பவருண்டு. வருஷத்தில் மொத்தக் காணிக்கை 1 மாத ஊதியமாக இருக்கும்படிக் கொடுப்பவருமுண்டு. காணிக்கை அவசியம். ஆனால் அதற்கு அளவு இல்லை. நம் பிரார்த்தனை பூர்த்தியாக காணிக்கை எந்தத் தொகையாக வேண்டுமானாலும் இருக்க-லாம். குறைந்தபட்சத் தொகைக்கும் செய்த பிரார்த்தனை பலிக்கும். ஒருவர் அதிகமான காணிக்கை செலுத்தினால் அது சேவையாக மாறிவிடும். வியாதி உள்ள ஒருவர் ஸ்ரீ அரவிந்தர் சமாதியைத் தரிசனம் செய்துவிட்டு, ஸ்ரீ அரவிந்தர் அறைக்குப்



போனார். காணிக்கை செலுத்த நினைத்தார். அவர் எந்தக் காணிக்கை - ரூ.5 அல்லது ரூ.10 - செலுத்தினாலும் வியாதி குணமாகும். அவர் செல்வர். காணிக்கை வேண்டித் திரும்பினார். அருகிலிருந்தவர் எதுவும் புரியாமல் பல ரூ.100 நோட்டுக்கட்டுகளைக் கொடுத்தார். எல்லாவற்றையும் காணிக்கையாகச் செலுத்திவிட்டார். 8-ஆம் நாள் வியாதி குணம் ஆயிற்று. அத்துடன் எல்லாவற்றையும் மறந்துவிட்டார். இரண்டரை ஆண்டுகளுக்குப்பின் புதிய நிலைமை ஏற்பட்டது. கனவிலும் கருதாத ஒன்று அவர் வாழ்க்கையில் நடந்தது. அவருடைய மாநிலத்தில் அவரை முதன் மந்திரியாக ஆக்க வேண்டுமென்று அநேகர் விரும்பினர். அவருக்குப் புரிய-வில்லை. அதுவும் நடந்தது. காணிக்கை செலுத்தும் நேரத்தில் பக்தியால் உந்தப்பட்டு பெருந்தொகைகளைச் செலுத்து-பவர்களுக்குப் பெரிய விஷயங்கள் நடப்பதுண்டு.

மாதம்தோறும் காணிக்கை செலுத்துவதை மட்டும் நோன்பாக ஏற்றுக்கொள்ளும் அன்பர் அதன் மூலம் முழுப் பலன் பெற செய்யக் கூடியவை என்ன?

1. முதல் கருத்து, காணிக்கைக்கு ஜீவனுண்டு என்பதை அறிந்து நாம் செலுத்தும் காணிக்கைக்கு ஜீவன் ஏற்படும் வகையில் அதைச் செலுத்தி, அந்த ஜீவனுடன் நாம் நித்தியத் தொடர்பு கொள்ள வேண்டும். அதை நிறைவேற்ற காணிக்கை ஒரு கடமை என்று செய்யாமல், ஜீவனுள்ள குழந்தையை வளர்ப்பது போன்ற உணர்வுடன் அதில் ஈடுபடவேண்டும்.
2. காணிக்கை என்பது நம் உடல் உழைப்பின் பக்தியை அன்னைக்குச் செலுத்துவது என உணர்ந்து, நம் உழைப்பை அன்னையின் சேவையாக, பொதுவாகக் கருத வேண்டும்.
3. காணிக்கையின் அளவை நம் சந்தர்ப்பத்திற்கேற்ப நிர்ண-யித்துக் கொள்ளலாம். அளவு இரண்டாம்பட்சம். நிர்ணயித்தபின் அதைக் குறைக்கக்கூடாது.
4. மாதம் வருமானம் வந்தவுடன், முதல் செலவு காணிக்கை-யாக இருக்க வேண்டும்.

5. காணிக்கை அனுப்பும்பொழுது அது சம்பந்தமான வேலை-களை, **M.O.** அனுப்புவது, செக் **(cheque)** எழுதுவது, தபாலில் சேர்ப்பது போன்றவற்றை நாமே நேரில் செய்ய வேண்டும்.

6. மனம் காணிக்கையைப் பவித்ரமாகக் கருத வேண்டும். பணமாகக் கருதக்கூடாது.

காணிக்கை சம்பந்தப்பட்ட வேலைகளைச் சமர்ப்பணம் செய்ய முடிந்தால் சிறப்பு. நாம் செய்ய வேண்டியவற்றை முறையாகச் செய்தால், காணிக்கை நேரத்தில் உரிய இடத்-திற்குச் சென்று, மறு தபாலில் பிரசாதம் வரும். காணிக்கையின் பூரணத்தையும், பவித்திரத்தையும், பிரசாதம் வரும் வேகத்தில் அறிந்து கொள்ளலாம். உதாரணமாக **M.O.** அனுப்பும்பொழுது நாம் புதிய நோட்டுக்களைப் போஸ்டாபீஸில் கொடுத்தால், அவை நேரடியாக அன்னையைச் சென்றடையாது என்று நமக்குத் தெரியும். ஆனால், நாம் கொடுக்கும் மனப்பான்மையே முக்கியம். காணிக்கையாக அனுப்பும் பணம் நம் மாத வருமானத்திலிருந்து வந்த அதே பணமாக இருப்பது நல்லது. **M.O.** மூலமாகவும், செக் **(cheque)** மூலமாகவும் அதே ரூபாய் நோட்டு போகாது என்றாலும், நாம் செய்வது நம்மைப் பொருத்தவரை நமக்குகந்தவையாகச் செய்துவிடுவது நல்லது. நம் ஸ்தாபனத்தில் சம்பளம் பல தேதி-களில் கொடுக்கலாம். நம்மைப் பொருத்தவரை நம் கைக்குச் சம்பளம் வந்தவுடன் முதல் காரியமாகக் காணிக்கையை அனுப்பிவிட்டால் போதும். ரூ.2000 சம்பளம் வாங்கிய ஒருவர் 1978-இல் ரூ.200 காணிக்கையாக அனுப்பிக்கொண்டிருந்தார். அவர் வேலையை விட்டு பயிற்சிக்காக ரூ.1000 சம்பளத்தில் அமர்ந்தார். ஏனோ அவர் காணிக்கையைக் குறைக்கவில்லை. தொடர்ந்து ரூ.200 அனுப்பினார். 1 வருஷம் என நினைத்த பயிற்சி 3 வருஷமாயிற்று. பல நல்ல காரியங்கள் நடந்தன. பெரிய இக்கட்டுகள் ஏற்பட்டன. 1978 முதல் 1988 வரை அவர் 5 இடங்கள் மாறினார். மூன்று வேறு தொழில்களில் இருந்தார். பயிற்சி ஓர் இடத்தில், சம்பள வேலை மற்றோர் இடத்தில், கூட்டாளியாக வேறோர் இடத்தில் எனப் பல நிலைகளில் அவர் இருந்தபொழுது பணம் அருமையானதாக மாறிய நேரங்கள் பல



உண்டு. காணிக்கையின் அளவை அவர் இந்த எல்லா நிலை-களிலும் குறைக்கவில்லை. இன்று 2 கோடி ரூபாய் நிறுவனத்தில் தலைவராகவும், முக்கிய பங்குதாரராகவும் விளங்குகிறார். அதுவே காணிக்கையின் மகத்துவம்.

### *11. நினைவே வழிபாடு:*

பகவான் ஸ்ரீ அரவிந்தருடன் சுமார் 30 ஆண்டு காலம் உடன் உறைந்து அவருக்குப் பணி செய்தவர் ஒரு சாதகர். ஒரு சமயம் பகவானை அவர் தமக்கு ஏதாவது சொல்லும்படிக் கேட்க, பகவான் ''இரவும், பகலும், எப்பொழுதும், தவறாது, இடை-விடாது, பிழை இல்லாமல் இறைவன் நினைவு வேண்டும் என்று பிரார்த்தனை செய்'' என்றார். அதுவே இந்த முறை. பொதுவாகப் பார்க்கப் போனால் இது மிக எளிய முறை. எவரும் பின்பற்றலாம். அதன் முழுமையைக் கவனித்தால், இம்-முறைக்குச் சிறப்புண்டு என்று தெரிகிறது.

எந்தச் செயலைச் செய்தாலும் - இறைவனை - அன்னையை நினைத்துச் செய்கிறோம். எந்தச் செயலைச் செய்யவில்லை என்றாலும், அன்னையை நினைவுகூர்கிறோம். எந்த எண்ணம் தோன்றினாலும் அன்னையை நினைத்தபின் எண்ணத்தைத் தொடர்கிறோம். எந்த உணர்ச்சி தோன்றினாலும் அன்னையை முதலில் நினைக்கிறோம். அதனால் இடையறாத நினைவு ஒரு தெய்வீகப் பூரணத்தைக் கொடுக்கிறது. ஆகவே அன்னை நம் வாழ்வில் பூரணமாகச் செயல்பட முடிகிறது. வாழ்வின் அஸ்தி-வாரங்கள் மாறுகின்றன. அவற்றின் தன்மை மாறுகிறது. தரம் மாறுகிறது. திறன் மாறுகின்றது. வழிபாட்டின் சிறப்பு மெல்ல, மெல்ல வாழ்வு முழுவதும் பரவி, அன்னையின் ஆதிக்கத்துள் நம்மைக் கொண்டு வந்துவிடுகிறது.

### இடையறாத அன்னை நினைவு:

1. வாயால் ஒரே ஒரு வார்த்தையும் பேசுதல் கூடாது.
2. எந்த சப்தம் கேட்டாலும், சப்தம் மனதைத் தொடுமுன் அன்னையை அழைக்க வேண்டும்.

3. உடல் அசையும்பொழுது, அசையுமிடத்தில் அன்னை-யைக் காணுதல் அவசியம்.

4. எந்தப் பொருளைத் தொடுமுன்னும் அதன்மீது அன்னையின் உருவத்தைக் காண வேண்டும்.

5. கண்ணில் படும் காட்சிகள் மனதைத் தீண்டும்முன் அன்னையின் உருவம் மனதைத் தொட வேண்டும்.

6. ஓர் எண்ணம் தோன்றினால், அதை விலக்கி, அன்னை நினைவால் அதை மாற்ற வேண்டும்.

7. எண்ணங்கள் தோன்றுமுன் அன்னை ஒளி மனதில் பளிச்சிட வேண்டும்.

8. ஒரு கவலை மனதில் எழுந்தால், வலிய அதை விலக்கி, அன்னையை அங்கு, இனி அக்கவலை எழாவண்ணம் பிரதிஷ்டை செய்ய வேண்டும்.

9. ஒரு யோசனை மனதில் தோன்றினால், இதை யோசிப்-பதைவிட அன்னையை நினைப்பதால், யோசனையால் ஏற்படும் பலன் முழுவதும் ஏற்படும் என்று அன்னையை நினைக்க வேண்டும்.

10. ஒரு காரியம் செய்யும்பொழுது அதைப் பல பாகங்களாக்கி, ஒவ்வொரு பாகத்தை நினைக்கும் முன்னும், மனம் அன்னையை நினைக்க வேண்டும்.

11. நமக்கு நடந்த எந்த நல்ல காரியம் நினைவுக்கு வந்தாலும், உடனே அன்னையை மனத்தால் நமஸ்கரித்து, நெஞ்சால் நன்றியை உணர வேண்டும்.

12. நமக்கு நடந்த எந்தக் கெட்டது நினைவு வந்தாலும், நினைவைச் சமர்ப்பணம் செய்ய வேண்டும்.

13. யார் நினைவுக்கு வந்தாலும், அன்னையை நினைப்பது மேல் என நினைவை மாற்றிக்கொள்ள வேண்டும்.

14. ஏதேனும் எரிச்சல் எழுந்தால், நாம் அன்னையை விட்டு விலகிப் போகிறோம் என அறிந்து, மனத்தின் திசையை மாற்றி, எரிச்சலை அடக்கி, அழித்து, கூடுமானவரை அதைச் சந்தோஷமாக மாற்ற முயல வேண்டும்.



15. ஒரு காரியத்தை மேற்கொள்ளும்முன், அன்னை இதைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார், அவர் இதை எப்படிச் செய்வார் எனக் கருத வேண்டும்.

16. பாசம், பிரியம், ஆசை, வேலையில் ஆர்வம், வேகம், தீவிரம் மனதுள் எழுந்தால், அவற்றை ஆன்மீக ஆர்வமாக மாற்ற வேண்டும்.

17. ஒரு செய்தி கேட்டுக் கவலை, ஏக்கம், பாரம், உற்சாகம் எழுந்தால், இவற்றையெல்லாம் அனுமதிக்கக்கூடாது; பதிலாக, அன்னை நினைவு சந்தோஷம், சுகம், ஆர்வத்தை எழுப்ப வேண்டும் என அறிய வேண்டும்.

18. குறையான காரியங்கள் நினைவு வரும்பொழுது, கவலை ஏற்படாமல், நம்பிக்கை குறையாக இருக்கிறது என அறிந்து, அன்னை நினைவை, நம்பிக்கை வளரும் வகையில் கொண்டு வர வேண்டும்.

19. யார் மீது கோபம், பிரியம் வந்தாலும், அதைவிட அன்னை நினைவு சிறப்பு என அதை நினைக்க வேண்டும்.

20. கடந்தகாலப் பழிவாங்கும் நினைவுகள் எழுந்தால், நாம் அன்னையை நெருங்க முடியாத தூரத்தில் உள்ளோம் எனப் புரிந்து, பழிவாங்கும் நினைவை அன்னை நினைவால் மாற்ற வேண்டும்.

**இடையறாத அன்னை நினைவு:**

''நினைவு என்பதென்ன'' என்பது ஒரு பெரிய தத்துவ விசாரம். ஞாபகம் என்பது அனைவருக்கும் முழு அளவில் இருப்பதில்லை. அதிக ஞாபக சக்தி உள்ளவர்களைக் கண்டு உலகம் வியக்கும். ஞாபகமே மனிதன் என்றும் கருதுபவருண்டு. மேல் மனத்திற்குத்தான் (**surface mind**) ஞாபகம் உண்டா, இல்லையா என்ற பிரச்சனை. உள்மனம் (**inner mind**) அப்பிரச்ச-னையைக் கடந்தது. அதற்கு அத்தனையும் நினைவுண்டு. நம் காதில் படாமல் நம்மைச் சுற்றி எழும் ஒலிகளும், நம் கவனத்தைக் கவராத காட்சிகளும் அங்குப் பதிவு செய்யப்-படுகின்றன. மீண்டும் அதை நினைவுக்குக் கொண்டுவரும் திறன் உள்மனத்திற்குண்டு. மேல்மனம், உள்மனத்திலிருந்து

பிரிக்கப்பட்டு, அறியாமையால் செப்பனிடப்பட்டது. அதனால், அதற்கு மற்ற அம்சங்களைப்போல, நினைவும் அளவுக்குட்பட்டது. மனத்திற்கு ஒரு மையம் உண்டு. அம்மையத்திற்கு அக்கரையுண்டு. அந்த அக்கரையில் படும் நிகழ்ச்சிகளை மனம் நினைவிலிருத்தும். மற்றவற்றை நினைவில் இருத்துவதில்லை. நிகழும்பொழுதே நினைவிலிருத்தப்படாதவற்றை, மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருவதில்லை. எனவே, இடையறாத நினைவு என்பது எந்த விஷயத்திலும் மனிதனுக்கு இருப்பதில்லை.

நாயன்மார் ஆண்டவனை இறைஞ்சிக் கேட்பது இடையறாத நினைவு. பகவானுடனிருந்த சாதகர் அவர் அறையிலேயே தூங்குவார். ஒரு மணி நேரம்கூட அறையை விட்டு வெளியில் போகாதவர். தனக்கு ஏதாவது கூறும்படி பகவானைக் கேட்டார். 'இரவும், பகலும், எப்பொழுதும் அகலாத இறைவன் நினைவு வேண்டும்' எனப் பிரார்த்திக்கச் சொன்னார். அந்தச் சாதகர் இறைவன் முன்னாலேயே இரவும், பகலும் இருக்கிறார். இருந்தாலும், கண் முன்னாலிருப்பது மனத்தில் நிலைத்திருக்கும் என்பதில்லை. மனத்தில் நீங்காமல் பகவான் குடிகொண்டால்தான் நீங்காத நினைவு ஏற்படும். இந்த நினைவு அன்னை மீதிருக்க வேண்டுமெனில் மனத்திற்கு அதிகத் திறன் வேண்டும். எளியவற்றை எளிமையாக நினைவிலிருத்தலாம். சிக்கலானவை, பெரியவை, விளங்காதவை நினைவில் எளிதில் தங்கா. அன்னையை மனத்திலிருத்த முழுத் திறனும் - சக்தி - தேவை. மனம் வேறெதிலும் ஈடுபடாமலிருந்தால் அன்னையை நினைக்க முடியும். மனத்தில் எண்ணம் எழுந்தால், மனத்தின் சக்தியை ஓரளவு எண்ணம் எடுத்துக்கொள்ளும். அதனால் அன்னையை நினைவுபடுத்துதல் கடினம். எண்ணமற்ற மனம் அன்னையை நினைவுகூரத் தேவை. எண்ணமே கூடாதெனில், எண்ணம் பேச்சாக மாறி வெளிவந்தால் அன்னை நினைவு அகலும். எனவே, வாயால் ஒரு வார்த்தை பேசினாலும் அன்னை நினைவு விலகும் என்பது உண்மை. மௌனத்தைத் தபஸ்விகள் நாடியதன் காரணத்தில் இதுவும் ஒன்று. பேசும் அவசியம் ஏற்பட்டால் என்ன செய்வது? அன்னையை நீங்காத



நினைவுடன் பெற மனம் விழைந்தபின் பேச்சு தானே அற்றுப்போய், குறைந்துவிடும். அன்னை மௌனத்தைப் பாராட்டவில்லை. **Controlled Speech** அளவுடன் பேசுவதையே அன்னை பாராட்டினார். பேசும் சந்தர்ப்பம் எழுந்தால், நாம் பேசினால் அது பேச்சு. பேச்சு மனத்தை அன்னையிடமிருந்து விலக்கும். எழும் பேச்சை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்தால், தேவையான பேச்சுக்கு அவர் அனுமதி அளிப்பார். அது அளவோடுள்ள பேச்சு. இது நாம் பேசுவதில்லை. இது நம்முள் அன்னை பேசுவதாகும். இப்பேச்சு மௌனத்தைக் கலைக்காது, அன்னை நினைவை அதிகப்படுத்தும். இதன்றி நம் மனத்தில் எழும் எண்ணம், சமர்ப்பணமின்றி வெளிவருவது பேச்சு. அதுபோன்ற சொல் வாயால் ஒன்றுகூட வரக்கூடாது.

இது முதல் நிபந்தனை. இடையறாத அன்னை நினைவை நாடுபவர் வாயால், ஒரு சொல்லும் சமர்ப்பணமின்றி வரக்கூடாது. ஒலி, ஒளி, மணம் போன்றவை புலன் வழி உள்ளே வருகின்றன. புலன் வழி வருபவற்றை மனம் ஏற்றுப் புரிந்துகொள்கிறது. அன்னை புலன்களிலில்லை, மனத்திலில்லை, ஆன்மாவில் - சைத்தியப்புருஷனில் - இருக்கிறார். ஆன்மாவே அன்னையை நினைக்க முடியும். மனத்தில் எழும் எண்ணம் அன்னை நினைவுக்குப் புறம்பானது. எனவே, மனத்தையும் கடந்து புறவெளியில் உலவும் புலன்களால் அன்னையை நெருங்க முடிவது இல்லை. ஓர் ஒலி கேட்கிறது எனில், காது மனத்திற்கு அதைச் சொல்கிறது. ஒலியை ஏற்கும் மனம், ஒலியை ஏற்று, அதன் பாதை வழியே ஒலி உற்பத்தியான இடத்தை நாடுகிறது. அன்னை வெளியில் இல்லை. அகத்தில் ஆன்மாவிலிருக்கிறார். அன்னை நினைவை நாடுபவர் ஒலி கேட்டவுடன், மனத்தைத் தாண்டி உள்ளே வீற்றிருக்கும் ஆன்மாவைத் தட்டி எழுப்பி, வெளியே போகும் சந்தர்ப்பம் வருகிறது. போகாதே, உள்ளே போய் அன்னையைக் காணுதல் தேவை என்று சொல்ல வேண்டும். அதைச் சொல்ல ஒலியை உள்ளே அனுமதிக்காமல், ஒலி மனத்தைத் தொடுமுன் அன்னையை நினைந்து, ஆன்மாவை நாட வேண்டும்.

*எந்தச் சப்தம் கேட்டாலும், சப்தம் மனத்தைத் தொடுமுன் அன்னையை அழைக்க வேண்டும்.*

நாம் நடமாடிக் கொண்டிருக்கிறோம், பேசுகிறோம், ஏதாவது செய்துகொண்டேயிருக்கிறோம். சும்மா உட்கார்ந்திருக்கும் பொழுதும் உடல் லேசாக அசைகிறது, கை, கால்களை அசைக்கிறோம், கண் சிமிட்டுகிறோம், ஆடையைத் திருத்துகிறோம். உடல் இருள் நிறைந்தது. மனம் ஒளியுடையது. உடலால் அன்னையை நினைப்பது கடினம். மனத்தில் அன்னை நினைவை நிலைநிறுத்தியபின், உணர்வைக் (vital) கவனித்தால், உணர்வு ஓயாமல் அசைந்துகொண்டே இருப்பதைக் காணலாம். விளையாடும் குழந்தையிடம் எதையும் சொல்வது சிரமம் என்பதுபோல், வேகமாக அசையும் உணர்விடம் எதையுமே சொல்ல முடியாது. அதை நிறுத்தி, அன்னையை நினைக்கும்படி சொல்வது எளிதல்ல. இது எவ்வளவு சிரமம் என அறிய உணர்வையே அன்னையை அழைக்கச் சொன்னால், அது முடியாது என எளிதில் காணலாம். அது முடிந்தால், க்ஷணத்தில் உடல் சக்தியால் நிரம்பி, யானை பலம் வருவது தெரியும். உடல் அதையும் தாண்டி இருளே உருவானது. உடலிடம் அன்னையைப் பற்றிச் சொல்ல மனம் முயன்றால், உடலைத் தொட்டவுடன், அதனிருளில் மனம் தன்னையே இழந்து திகைப்பதைக் காணலாம். இடையறாத அன்னை நினைவு பலிக்க வேண்டுமானால், உடலே அன்னையை நினைவுகூர வேண்டும். (Gross) ஸ்தூல உடலில்லாத தெய்வங்களால் இடையறாத நினைவு முடியாது எனத் துர்கா அன்னையிடம் கூறினார். இடையறாத அன்னை நினைவு ஸ்தூல உடலுக்குரியது. அது இருள் மயமானதெனினும் அதுவே சாதிக்க வல்லது. எனவே, உடல் அசைந்தால், அசைவுள்ள இடத்தில் உணர்வு எழுந்து மனத்தை அடையும்.

அதற்குப் பதிலாக, அசைவு எழுமுன் அங்கு அன்னையைக் கண்டால், அன்னை எழுந்து மனத்தையடைந்து, ஆன்மாவுக்குச் சென்று நினைவை நிலைப்படுத்துவார்.

*உடல் அசையும்பொழுது அசையுமிடத்தில் அன்னையைக் காணுவது அவசியம்.*



நம்முடலின் அசைவு நம்முள் எழுவது. உடலின் பகுதிகள் வேறு பொருளைத் தொட்டு, தொடு உணர்வு ஏற்பட்டாலும் சட்டம் இதுவே ஆகும்.

*எந்தப் பொருளைத் தொட்டாலும், தொடுமுன் அதன்மீது அன்னையின் திருவுருவத்தைக் காண வேண்டும்.*

காது ஒளியைக் கேட்டு மனத்தை அடைவதைப்போல், கண் தான் கண்ட காட்சியை மனத்திற்கு எடுத்துச் செல்வதால்,

*கண்ணில் கண்ட காட்சிகள் மனத்தைத் தொடுமுன் அன்னையின் உருவம் மனத்தைத் தொட வேண்டும்.*

அதேபோல் எண்ணத்தைப் பற்றி முதலில் சொல்லியதால்,

*ஓர் எண்ணம் தோன்றினால் அதை விலக்கி, அன்னை நினைவால் அதை மாற்ற வேண்டும்.*

எண்ணம் தோன்றியபின் மின்னல் வேகத்தில் - மனோ வேகத்தில் - நகருவதால், தோன்றியபின் அதைக் கட்டுப்படுத்துவது இயலாது. எண்ணம் மனத்திற்குரியது; மனத்தில் தோன்றுகிறது. அன்னை நினைவு ஆன்மாவுக்குரியது; ஆன்மாவில் எழுவது. நாம் மனத்தில் விழிப்பாக இருப்பதால் எண்ணம் தோன்றுகிறது. ஆன்மா, எண்ணம் தோன்றும் மனத்தைவிடப் பெரியது; வலிமையானது. ஆன்மாவில் நாம் விழிப்பாக இருந்தால், மனம் அசைந்து எண்ணம் எழுமுன், ஆன்மா அசைந்து அன்னை நினைவு எழும். இந்த விழிப்பும் (உஷாரும்) அன்னை நினைவுக்கு அவசியம்.

*எண்ணங்கள் தோன்றும்முன் அன்னை ஒளி ஆன்மாவிலிருந்து புறப்பட்டு மனத்தில் பளிச்சிட வேண்டும்.*

ஐம்புலன்களை நாம் அறிவோம். எண்ணம், கவலை போன்றவை அவற்றைக் கடந்தவை. எண்ணம் மனத்திற்குரியது; கவலை உணர்வுக்குரியது. கவலை சகஜமாக எழும். எழுந்தமாத்திரம் உணர்வைக் கவ்விக்கொள்ளும். உணர்விலிருந்து மனத்தை எட்டி, கவலை நியாயமானது எனக் கூறும்.

மனம் அதை ஏற்றால், பிறகு கவலையை அழித்தல் கடினம். மனத்தைக் கட்டுப்படுத்துவதைவிட உணர்வைக் கட்டுப்படுத்துவது சிரமம். சிரமமாயினும் செய்வது அவசியம்.

*ஒரு கவலை மனத்தில் எழுந்தால், வலிய அதை விலக்கி, அன்னையை அங்கு, இனி அக்கவலை எழாவண்ணம் பிரதிஷ்டை செய்ய வேண்டும்.*

யோசனை என்பது பல எண்ணங்கள் சேர்ந்தது. இந்தக் காரியத்தைச் செய்யலாமா எனில், அதனுள் பல எண்ணங்கள் திரண்டிருக்கும். யோசிக்க ஆரம்பித்தால் எண்ணங்கள் செயல்படும். செயல்பட ஆரம்பித்த எண்ணங்கட்கு வலிமை அதிகம். வலிமை சேர்ந்தபின் அவற்றைக் கட்டுப்படுத்துவது கடினம். அவற்றை மீறி அன்னை நினைவு எழாது. யோசித்து நாம் ஒரு முடிவுக்கு வருகிறோம். முடிவைச் செயல்படுத்தினால், பலன் வரும். அப்பலன் நம் முடிவையும், யோசனையையும் பொறுத்தது. தினமும் நமக்குப் பல்வேறு யோசனைகள் எழுகின்றன. எனவே, அன்னை நினைவு யோசனையற்ற மற்ற நேரங்களுக்கேயுரியது எனத் தோன்றுகிறது. இந்த மனப்பான்மையுடன் அன்னை நினைவைப் பெறலாம். ஆனால் இடையறாது பெற முடியாது. இதை மாற்ற வேண்டும். யோசிக்கும்பொழுது யோசனையை நம்புகிறோம். அதை நம்பினால் பலன் யோசனையால் நிர்ணயிக்கப்படும். யோசிக்காமல் செயல்படுவதைவிட யோசனை மேல். யோசனையைவிட நம்பிக்கை உயர்ந்தது. நாம் யோசிப்பதற்குப் பதிலாக, நம் முடிவைவிட உயர்ந்த அன்னை முடிவை நாடுதல் சிறப்பு. அன்னையை நினைவுகூர்ந்தால் நம்பிக்கை நம்மிடமிருந்து அன்னைக்கு மாறுகிறது. மாறியபின் செயல்படுவது அன்னை முடிவு. அது பெரியது. அதை நம்பினால், யோசனையை விலக்கி, அன்னையை நினைவுகூர வேண்டும்.

*ஒரு யோசனை மனதில் தோன்றினால், இதை யோசிப்பதைவிட அன்னையை நினைப்பதால், யோசனையால் ஏற்படும் பலன் முழுவதும் ஏற்படும் என்று அன்னையை நினைக்க வேண்டும்.*



நாம் செய்யும் காரியங்களை நாம் ஆரம்பிக்கிறோம்; செய்கிறோம். அதற்கு வரும் பலனைப் பெறுகிறோம். சமர்ப்பணம் செய்தால் அன்னையின் பலன் வருகிறது. அதைவிட உயர்ந்த நிலை ஒன்றுண்டு. காரியத்தைப் பல பாகங்களாக்கி, ஒவ்வொரு பாகத்தையும் சமர்ப்பணம் செய்தால், காரியம் பெரிய அளவில் அன்னை பலனை அளிக்கும்.

*ஒரு காரியம் செய்யும்பொழுது அதைப் பல பாகங்களாக்கி ஒவ்வொரு பாகத்தை நினைக்கும் முன்னும், மனம் அன்னையை நினைக்க வேண்டும்.*

கடந்த கால நினைவு வந்தபடியிருக்கும். அவற்றுள் நல்லவை, கெட்டவை கலந்திருக்கும். நல்ல காரியங்கள் மனத்தைச் சந்தோஷப்படுத்தும். அந்நேரம் நாம் அன்னையை மனத்தால் நமஸ்காரம் செய்து, நன்றியுணர்வால் நிறைதல் நினைவை நிலைப்படுத்தும்.

நமக்கு நடந்த எந்த நல்ல காரியம் நினைவுக்கு வந்தாலும், உடனே அன்னையை மனத்தால் நமஸ்கரித்து, நெஞ்சால் நன்றியை உணர வேண்டும்.

கெட்டவை நினைவுக்கு வந்தால், மனம் வேதனைப்படுகிறது. வேதனைப்பட்டாலும், வருத்தப்பட்டாலும் நடந்தவை - கெட்டவை - வலுப்படும். நாம் எப்பொழுதும் உணர வேண்டிய ஒரேயுணர்வு சந்தோஷம். கெட்டவை நினைவு வந்தால் சந்தோஷம் எப்படி வரும்? கெட்டவை பல காரணங்களுக்காக நடக்கின்றன.

1. பின்னால் வரக்கூடிய பெரிய கெட்டதைத் தவிர்க்க,
2. நம் மனம் உணர வேண்டியவைகளை உணர,
3. நம்மை விட்டு விலக்க வேண்டியவர்களை விலக்க,

என்பன போன்ற பல காரணங்களுக்காக அவை நடப்பதை நாம் அறிந்து, வருத்தப்படுவதையும், வேதனைப்படுவதையும் மாற்றி, நமக்கு ஏன் அவை நடந்தன எனப் புரியவில்லை; எனவே, வருத்தப்படுவது சரியில்லை என்று முடிவு செய்தால்

சரி. அப்படியும் அந்நிகழ்ச்சி மனத்தை விட்டகலவில்லை எனில், அவற்றின் வரலாற்றைச் சமர்ப்பணம் செய்ய வேண்டும்.

*நமக்கு நடந்த எந்தக் கெட்டது நினைவு வந்தாலும் அந்நினைவைச் சமர்ப்பணம் செய்ய வேண்டும்.*

நமக்குப் பலர் பற்றிய நினைவுகள் வந்தபடியிருக்கின்றன. ஒருவரைப் பற்றி நினைத்தால் நினைவு அவ்வழியே பல நிகழ்ச்சிகளுக்கு ஓடுகிறது. ஓடியபின் அன்னை நினைவு விலகும். யாரையும் நினைப்பதைவிட, அன்னையை நினைப்பது மேல் என மனத்தை மனிதரிடமிருந்து அன்னைக்கு மாற்ற வேண்டும்.

*யார் நினைவு வந்தாலும், அன்னையை நினைப்பது மேல் என நினைவை மாற்றிக் கொள்ள வேண்டும்.*

எரிச்சல் பல விதம். கோபத்தை அடக்கினால் எரிச்சல் வருகிறது. எரிச்சலை அடக்கினால் விரக்தி ஏற்படுகிறது. அதை விலக்க முயன்றால் படபடப்பு வருகிறது. **Irritation, annoyance, irksomeness, pinpricks, tension, listlessness, impatience** எரிச்சல், குத்தல், சலிப்பு, பொறுக்க முடியவில்லை எனப் பல உருவங்களில் எரிச்சலும், அதன் உருவங்களும் நம்மை நாடுகின்றன. இவை அன்னையை விட்டு விலகி அகலும் பாதைகள் என நாம் அறிய வேண்டும். அறிந்து, விலகி, அவற்றைச் சந்தோஷமாக மாற்ற வேண்டும்.

*ஏதேனும் எரிச்சல் எழுந்தால், நாம் அன்னையை விட்டு விலகிப் போகிறோம் என அறிந்து, மனத்தின் திசையை மாற்றி, எரிச்சலை அடக்கி, அழித்து, கூடுமானவரை அதைச் சந்தோஷமாக மாற்ற வேண்டும்.*

நமக்குப் பழக்கமில்லாத புதிய சூழ்நிலைகள் ஏற்பட்டால், நாம் யோசிக்கிறோம்; பிறரைக் கலந்து ஆலோசிக்கிறோம். அவை நல்லவை. அன்னை இதைப் பற்றி ஏதேனும் சொல்லியிருக்கிறாரா என அறிய முயல வேண்டும். அன்னை இதுபோன்ற காரியங்களை எப்படிச் செய்வார் என நினைக்க



வேண்டும். இடையறாத அன்னை நினைவுக்குப் பெருந்துணை இது.

*ஒரு காரியத்தை மேற்கொள்ளுமுன், அன்னை இதைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார், அவர் இதை எப்படிச் செய்வார் எனக் கருத வேண்டும்.*

பாசம் இயல்பாக எழுகிறது. பிரியம் சில சமயம் உதயம் ஆகிறது. ஆசைக்கு எப்பொழுதும் அலுவலுண்டு. வேலையில் ஆர்வம் திறமையுள்ளவர்க்குண்டு. வேகம், ஆவேசம், தீவிரம் மனதுள் எழும் நேரமுண்டு. அன்னையை ஏற்றுக்கொண்ட பின் ஆர்வம் அன்னையை மட்டும் நாட வேண்டும். எனவே, மேற்சொன்ன உணர்வுகளை அன்னை மீது ஆர்வமாக மாற்ற வேண்டும். எப்படி? குழந்தை மீது பாசம், மனைவி மீது பிரியம், துணி மீது ஆசை, வேலையில் ஆர்வம் எழும்பொழுது, இவற்றை அனுமதித்தால் நாம் மனிதனாக இருக்கிறோம். நாம் அனுமதிக்கக் கூடியது அன்னை ஆர்வமே என உணர்வு மையத்திலிருந்து - பாசம் போன்றவை எழுமிடம் - ஆன்மாவுக்குச் சென்று ஆர்வத்தை எழுப்ப வேண்டும்.

*பாசம், பிரியம், ஆசை, வேலையில் ஆர்வம், வேகம், தீவிரம் மனதுள் எழுந்தால், அவற்றை* ***aspiration*** *ஆன்மீக ஆர்வமாக மாற்ற வேண்டும்.*

செய்திகள் கவலையைத் தாங்கி வருகின்றன. சில ஏக்கத்தைக் கிளப்புகின்றன. மற்றவை மனத்தில் பாரமாகின்றன. சில உற்சாகத்தைக் கொடுக்கின்றன. நல்ல உற்சாகமானாலும், கெட்ட கவலையானாலும், இவை அனுமதிக்கப்படக்கூடியவையல்ல. சந்தோஷம், சுகம், ஆர்வம் ஆகியவை அனுமதிக்கப்படக்கூடியவை என அறிந்து, அவற்றை மாற்ற முயல வேண்டும்.

*ஒரு செய்தி கேட்டுக் கவலை, ஏக்கம், பாரம், உற்சாகம் எழுந்தால், இவற்றை எல்லாம் அனுமதிக்கக்கூடாது; பதிலாக*

*அன்னை நினைவு, சந்தோஷம், சுகம், ஆர்வத்தை எழுப்பவேண்டும் என அறியவேண்டும்.*

நாம் செய்தவற்றில் குறையானவையுண்டு. அவை நினைவு வரலாம். வந்தால் மனம் குறைபடும், கவலைப்படும். அதற்குப் பதிலாக, ஏன் காரியம் குறையாக நின்றது எனச் சிந்தித்தால், நம் நம்பிக்கை குறையாக இருப்பதால், காரியம் குறையாக நின்றுவிட்டது எனப் புரியவேண்டும்.

*குறையான காரியங்கள் நினைவு வரும்பொழுது, கவலை ஏற்பட்டால் நம்பிக்கை குறையாக இருக்கிறது என அறிந்து, அன்னை நினைவை நம்பிக்கை வளரும் வகையில் கொண்டுவர வேண்டும்.*

கோபம் வந்தபடி இருக்கும். அதேபோல் பிரியம் எழுந்தபடி இருக்கும். கோபம் பொல்லாதது; பிரியம் நல்லது. நாம் எக்காரணத்திற்காகக் கோபப்பட்டாலும், யார் மீது கோபப்பட்டாலும், நஷ்டம் நமக்கு என்ற தெளிவிருந்தால், கோபம் தணியும். தணிந்த கோபம் தணலாக நிற்கும். அன்னை நினைவு குளிர்ந்த தென்றல். அன்னையை நினைத்தால் தணிந்த கோபம் குளிர்ந்தடங்கும். கோபம் இருக்கும்வரை அன்னை நினைவு நிலைக்காது என்பதால், கோபம் எழும்பொழுது, அன்னையை நினைவுபடுத்துதல் நலம். பிரியம் நல்லது; கோபத்தைப்போல் பொல்லாததல்ல. ஆனால், யார் மீது பிரியம் எழுகிறதோ, எதன் மீது பிரியம் எழுகிறதோ, அதை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும். பிரியம் வளர்ந்தால், அப்பொருளோடு நாம் ஐக்கியமடையவேண்டிவரும். இது அன்னையை நினைக்கவோ, அடையவோ, இடையறாது நினைக்கவோ பயன்படாது.

*யார் மீது கோபம், பிரியம் வந்தாலும், அதைவிட அன்னை நினைவு சிறப்பு என அதை நினைக்க வேண்டும்.*

மனம் பக்குவப்படவில்லை எனப் பொருள். மனம் பக்குவப்பட பல வழிகள் உள. அவற்றுள் சிறந்தது அன்னையை நினைப்பது. அதைவிடச் சிறந்தது, பழிவாங்கும் எண்ணத்தையும், அதனுடன் சேர்ந்த நிகழ்ச்சிகளையும் சமர்ப்பணம் செய்து, பிறகு அன்னையை நினைப்பதாகும்.



*கடந்தகாலப் பழிவாங்கும் நினைவுகள் எழுந்தால், நாம் அன்னையை நெருங்க முடியாத தூரத்தில் உள்ளோம் எனப் புரிந்து, பழிவாங்கும் நினைவை அன்னை நினைவால் மாற்ற வேண்டும்.*

இடையறாத நினைவு சித்தியாகும். அது சித்தித்தால் அடுத்த கட்டத்தில் இடையறாத தரிசனம் சித்திக்கும். அதன் விளைவாக பரமாத்மா, பிரபஞ்சத்தின் ஆன்மா, ஜீவாத்மா தரிசனம் கிடைக்கும். சர்வம் பிரம்மம் என்பதை ரிஷிகள் கண்டபின், கீதையே முதன்முதலாக இம்மூன்று புருஷர்களையும் பிரித்துத் தத்துவத்தை விளக்கியதாகப் பகவான் எழுதுகிறார். ஆத்ம தரிசனம் மோட்சம். பரமாத்மாவை ஜீவாத்மா ஒன்றி, பரமாத்மாவை அடைவது பூரணயோக சித்தி, அதற்கு அடிப்படை இடையறாத தரிசனம். அதற்கு முன்நிலை இடையறாத அன்னை நினைவு. இது சித்தித்ததற்குப் பல்வேறு அடையாளங்களுண்டு. அவற்றுள் ஒன்று.

**இணைபிரியாத ஆன்ம எழுச்சி:**

இடையறாது நம் மனத்தை ஆட்கொள்வது ஒன்றுண்டு. அதை நாம் அறிவதில்லை. அறிந்தாலும் பொருட்படுத்துவதில்லை. விளையாட்டில் உற்சாகமுள்ள மாணவன் இரண்டு மணி நேரம் விளையாடினால், அதைப் பற்றி நண்பர்களுடன் ஐந்து மணி நேரம் பேசுவான். மீதி நேரம் முழுவதும் அவன் மனத்தை விளையாட்டு ஆட்கொண்டிருக்கும். விளையாடும் வயதில், விளையாட்டு மனத்தை நிரப்பிக்கொண்டிருக்கும். திருமண வயதில் ‘‘இளநங்கை’’ மனதில் அகலாமல் வீற்றிருப்பாள். வேலைக்குப் போனபின் வேலை, குடும்பம், உயர்வு, அதேபோல் மனத்தில் உரிமை கொண்டாடும். வேலை மனத்திலிருந்தால், அதனடியில் மனைவியும், அதற்கடியில் விளையாட்டும் இருப்பதை நாம் அறிவோம். ஆனால், அதைக் கவனிப்பதில்லை. இவை இடையறாது முழுமனதை

ஆட்கொண்டு இருப்பதை ஆங்கிலத்தில் **occupation** என்பார்கள். அவற்றுள் ஒன்று பிரச்சனையாகிவிட்டால் தீவிரமாக மனம் அதையே நினைப்பதை **preoccupation** என்பார்கள். நாயன்மார்கள் மனம் சிவபெருமானால் அதுபோல் நிரப்பப்பட்டிருந்தது. மகனுக்குப் பெயரிடத் திருநாவுக்கரசு என்பதை நினைத்தவர், அடுத்தடுத்த மகன்கட்கும் அதே பெயரையிட்டு, மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு என்றார். திருமணமான பெண் ஆங்கிலம் கற்றுக்கொள்ளும்பொழுது, அவளைத் தினமும் 500 வாக்கியங்கள் எழுதச் சொன்னார். அவள் தன் மாமனை மணந்தவள். **Uncle is tall, Uncle bought a bike, Uncle has come** என 500 வாக்கியங்களில் 100-க்கு மேல் மாமனைப் பற்றி எழுதினாள். அவள் மனம் மாமனால் நிரப்பப்பட்டுள்ளது. எது நம் மனத்தை நிரப்பியுள்ளது எனில் நம் வாழ்வில் வளரும் முனை நிரப்பியுள்ளது எனப் புரிகிறது. அதற்கு முந்தைய நிலைகள் படிப்படியாக அவற்றிற்கு அடியில் அமைந்துள்ளன.

உடல் வளரும்பொழுது உடல் வளர்ச்சியும், அதற்கு உரியவையும் மனத்தை நிரப்புகின்றன. உணர்வு வளரும் பொழுது ஆசை மனத்தை நிரப்புகின்றது. மனம் வளரும் பொழுது எண்ணம் மனத்தை நிரப்புகிறது. ஆன்மா நம்முள் வளர்ந்தால் பக்தி மனத்தை நிரப்பும். அந்நிலை இடையறாத நினைவுக்குரியது. நம்முள் அன்னை வளர வேண்டும். உடல், உணர்வு, மன வளர்ச்சியைத் தாண்டி ஆன்மாவில் அன்னை வளர்ந்தால், அம்மனநிலை இடையறாத அன்னை நினைவுக்குரியது ஆகும். உடலுக்குரிய பொருளையும், உணர்வுக்குரிய ஆசையையும், மனத்திற்குரிய அறிவையும் கடந்து, ஆன்மாவுக்குரிய அன்னையை நம் ஜீவன் விழைந்தால், இடையறாத அன்னை நினைவு பலிக்கும்.

இடையறாத நினைவு மிகப்பெரிய சாதனை; யோகசித்தியில் முதற்கட்டம் எனப் புரிகிறது. மிகப்பெரிய சாதனையை, இன்று நமக்குள்ள சக்தி சாதிக்க முடியாது. நமக்குத் தொழில் செய்ய, குடும்பம் நடத்த சக்தியுள்ளது. இது ஒரு தொழிற்சாலை



நடத்தவோ, கட்சித் தலைவராக இருப்பதற்கோ போதாது. சக்திகளின் நிலை பல.

மிகச்சிறியதான சக்தி உடல் உழைப்பால் எழுவது. அது உழைப்பாளியின் சக்தி. அவனுடைய முழு உழைப்புக்கு, நெற்றி வியர்வை நிலத்தில் விழுந்தால் தினக்கூலி கிடைக்கும். அதைவிட உயர்ந்தது பிராணனுடைய சக்தி **vital energy**. இது மானேஜர் பதவியிலுள்ளவருக்குரிய தகுதி. அதற்கடுத்த உயர்ந்த நிலை மனத்தின் சக்தி. **(Experts)** தொழில் நுணுக்க வல்லுநருடைய சக்தி அது. மனத்தில் ஆன்மா வெளிப்பட்டால், வல்லுநர் புதியதாக ஒரு முறையைக் கண்டுபிடித்து புகழடைவார். இது மனத்தின் சக்தியைவிடப் பெரியது. பிராணனில் உள்ள ஆன்மா வெளிப்பட்டால் அடுத்த உயர்ந்த நிலை சக்தி எழும். அது சிப்பாயின் தைரியம், **I.A.S.** அதிகாரியின் நேர்மையிலிருந்து எழும் சுதந்திரமான தைரியம். அதற்கு அரசியல் தலைவர்களும் அடங்குவார்கள். கடைசி கட்ட உயர்நிலை சக்தி உடலில் உள்ள ஆன்மா வெளிப்படுவதால் எழுவதாகும். இது பூரணயோகத்திற்குரிய அன்னை சக்தி. இத்தனை சக்திகளையும் அன்னை நமக்கு வழங்குகிறார். எந்த நேரம் எது வருகிறது என நாம் அறிவதில்லை. பிரார்த்தனையால் திடீரென சூழ்நிலை மாறி ஆச்சரியம் போல் நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அன்னையிடமிருந்து வருவது ஒரு காரியத்தைப் பூர்த்தி செய்து மின்னல் போல் மறையும். அதே சக்தி நம்முள்ளிருந்து எழுந்தால், அது நிரந்தரமாக இருக்கும். இந்த கடைசி கட்ட பூரணயோக சக்தி உடலிலிருந்து எழுவதால், அதிக வலுவுள்ளது. அதுவே இடையறாத அன்னை நினைவை சாதிக்கும்.

நாமுள்ள நிலையிலிருந்து அதை எட்ட நினைப்பது அறிவுடைமையா என்று நினைக்கலாம். மனம் இடையறாத நினைவை நாடினால், அது நம் முயற்சிக்குச் சித்திக்கும் எனப் பொருள். மனம் அதை நாடாதவர்க்கு அதில்லை.

மனம் அதை நாடுகிறது, அடிக்கடி இடையறாத நினைவு வேண்டும் என்று தோன்றுகிறது என்றால் பலிக்கும் வித்துளது

எனப் பொருள். அதற்குரிய முயற்சி பலன் தரும். இந்நினைவு ஓரளவு இதற்குரிய சக்தியைத் தரும். நாம் உள்ள நிலையில் மற்றவர்களைவிட அதிகமாகச் சாதிக்க இது உதவும். நாம் செய்யும் காரியங்களில் இதுவரை நம் கண்ணில் படாதவை படும். எந்தத் தொழிலுக்கு முதன்முறையாகப் போனாலும், அங்கு இதுவரை பெயரெடுத்தவர்களைவிட அதிகமாகச் சாதிக்க முடியும் என்பதைக் காணலாம். விவசாயத்தை மூன்று தலைமுறையாக அறியாதவர் அவசியத்தால் விவசாயத்தை மேற்கொண்டு செய்ததைக் கண்ட பரம்பரை விவசாயி, ‘‘நாமெல்லாம் இங்கேயே இருக்கிறோம். பரம்பரையாக விவசாயம் செய்கிறோம். இவர் ஊருக்குப் புதியவர்; விவசாயத்திற்குப் புதியவர். நம்மைவிட அளவுகடந்த சிறப்போடு செய்திருக்கிறார். நாம் இவரைப் பின்பற்ற வேண்டும்’’ என மேடை ஏறிப் பேசினார்.

தொடரும்...

## ஜீவிய மணி

சிந்தனை அழிவது சாதனை சிறப்பது. எந்தச் சிந்தனையும் அற்றவன் எதையும் சிந்திக்காமல் சாதிப்பான்

அழியும் சிந்தனை மனத்தை உணர்வாக்கும்.

உணர்வு நிறை மனம் உத்தமமான ஆத்மா.

ஆத்ம விழிப்பு சாதனையை நாடாது.

ஆத்மா விழித்தால் சாதனை ஆத்மாவை நாடும்.

சாதனை நாடி வருவது சத்தியத்தின் கருவியாவதாகும்.



# அன்பர் அனுபவம்

விஜயலட்சுமி, அம்பத்தூர்

என் பெயர் விஜயலட்சுமி. நான் அம்பத்தூரில் வசித்து வருகிறேன். நான் கடந்த ஜூன் 2000-ஆம் ஆண்டு முதல் அம்பத்தூர் தியானமையம் சென்று வருகிறேன். எங்கள் வீட்டில் கிணற்றிலிருந்துதான் மோட்டாரில் தண்ணீர் வரும். கிணற்றில் தண்ணீர் இல்லாததால் மோட்டார் எடுக்கவில்லை. எங்கள் வீட்டில் போர் போடவில்லை. அதனால் நாங்கள் தெருவில் வரும் மெட்ரோ வாட்டரைத்தான் உபயோகித்து வந்தோம்.

பத்து வருடங்களாகத் தண்ணீர் கஷ்டம் இருந்துகொண்டு-தான் உள்ளது. நான் தினமும் ஒரு சிறிய கிண்ணத்தில் தண்ணீர் பிடித்து அன்னைக்கு வைத்து தண்ணீர் தட்டுப்பாடின்றி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்வேன். அம்பத்தூர் தியான மையத்தில் ‘மாநிலம் காக்கும் மழை புத்தகத்தை வாங்கி தினமும் உங்கள் வீட்டில் படியுங்கள். உங்கள் வீட்டில் தண்ணீர் கஷ்டம் தீரும்’ என்று சொன்னார்கள். எனக்கு மாநிலம் காக்கும் மழை புத்தகத்தைப் படிக்கக் கொடுத்தார்கள். நானும் ஏப்ரல் 3-ஆம் தேதி அப்புத்தகத்தை வாங்கி வீட்டில் வைத்து தினமும் படிக்க ஆரம்பித்தேன். ஐந்து நாட்கள்தான் படித்தேன். ஏப்ரல் 8-ஆம் தேதி என் சகோதரர்கள் எல்லோரும் சேர்ந்து போர் போட்டு விடலாம் என்று முடிவெடுத்து, உடனே ஏப்ரல் 18-ஆம் தேதி வெள்ளிகிழமை அன்றே போர் போட்டு விட்டோம். தண்ணீர் வந்து விட்டது. எங்கள் வீட்டில் போர் போடுவார்கள் என்று நாங்கள் கனவில்கூட நினைக்கவில்லை. அன்னை தண்ணீர் கஷ்டத்தை தீர்த்து விட்டார்கள். ‘அன்னை கிள்ளிக் கொடுக்கமாட்டார்கள். அள்ளித்தான் கொடுப்பார்கள்’ என்று சொற்பொழிவுகளில் நான் கேட்டிருக்கிறேன். அதேபோல் அன்னை பெரிய அற்புதம் நடத்திவிட்டார்கள்.

தண்ணீர் கஷ்டம் தீர்ந்ததற்கு அன்னைக்கும், அம்பத்தூர் தியான மையத்திற்கும், பானுமதி அவர்களுக்கும் என்

மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சென்னையில் இப்போது தண்ணீர் கஷ்டம் அதிகமாக உள்ளதாலும், மழை இல்லாத காரணத்தினாலும் அன்னை அன்பர்கள் எல்லோரும் 'மாநிலம் காக்கும் மழை' என்ற புத்தகம் வாங்கிப் படித்தால் அன்னையின் அருளால் அனைவரும் பயன் அடையலாம் என்ற கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

## ஜீவிய மணி

கடவுளுக்குப் பயப்படுவதற்கு பதிலாக, செயலை 'இது ஆண்டவன் செயல், இதை நான் பூர்த்தி செய்வது ஆண்டவனுக்கு மகிழ்ச்சி தரும், எனவே இதை ஆண்டவனுக்கே அர்ப்பணமாகச் செய்கிறேன்' என்று செய்தால் மனம் அளவு கடந்து அடங்கும், சாந்தி நிலவும், அமைதி உடலெல்லாம் பரவும், பொறுமை எழும், சக்தி உற்பத்தியாகும், அடுத்தவர் பேச்சு காதில் விழாது. வேலையில் மனம் அதிகமாக ஈடுபடும், வேலை மேலும் புரியும், செய்யும் வேகம் அதிகரிக்கும், தவறு, குறை, பிசகு, பிழை வாராது. குழப்பம் நீங்கும், 3 மணி வேலை இரண்டரை மணியில் முடியும், மனம் மகிழ்வால் நிறையும். நாம் நம்மை ஆபிஸுக்கோ சம்பளத்திற்கோ, கடமைக்கோ கட்டுப்படுத்திக் கொள்ளும் பொழுதுள்ளதைவிட திறமை, ஆர்வம், வேகம், தெளிவு எழுவதைக் காணலாம். சுதந்திரம் அதிகமானால் - சமூகம், சம்பளம், மனச்சாட்சி ஆகியவற்றிலிருந்து விடுபட்டு - சுதந்திரம் ஒன்றே சூழல் என்றானால், செயல் இறைவன் செயலாக மாறும். இது அன்னை விரும்பும் முறை.



## அஜெண்டா

### நம்பிக்கை முக்கியம் - கட்டுப்பாடல்ல

Volume 11, page 99

- கட்டுப்பாடு — எவருக்கும் அவசியம்.
- குடும்பம், ஊர், உலகம் கட்டுப்பாட்டால் உயரும்.
- கட்டுப்பாடு காலத்தால் கனிவது பண்பு.
- பண்பு இனிமையாக வெளிப்படும்.
- செயலில் பண்பு, பொறுமை, நிதானமாகும்.
- செயலில் பொறுமை வர, மனத்தில் நிதானம் தேவை.
- நிதானம் இயல்பாக நம்பிக்கையை எழுப்பும்.
- மனம் பெறும் நிதானம் ஆத்மா அனுமதிக்கும் சுதந்திரம்.
- சுதந்திரம் சுயமான தந்திரம்.
- தந்திரம் செயலாற்றும் முறை, திறன்.
- சுயமானது சுயமாகவே இருக்கும், செயல்படாது.
- சுயம் அகம், திறனும் செயலும் புறம்.
- சுதந்திரம், சுயதந்திரம் என்பது அகம் புறத்தில் செயல்படுவது.
- அகம் புறத்தில் தடையின்றிச் செயல்படுவது சுதந்திரம்.
- பொதுவாக நம்பிக்கைக்கு உறைவிடம் குடும்பம்.
- மனிதன் பிறப்பால், இயல்பாக தன்னை மட்டும் நம்புவான்.
- தன்னை முழுவதும் தெம்பாக, திறமையாக நம்ப உதவுவது குடும்பம்.
  குடும்பம் ஊரின் பகுதி, அதன் சிறு உலகம்.
  எந்த அளவுக்கு ஊர் ஒருவனை நம்புகிறதோ அந்த அளவுக்கு அவன் தலைவனாவான்.
- ஊரின் நம்பிக்கை உலகின் நம்பிக்கையானால், தலைவர் பெரும் தலைவராவார்.
- பெரும் தலைவரை உலகம் நம்ப அவருக்குச் சுயமாக தன்னை நம்பமுடியுமானால், அவர் அரசியல் வானில் அவதார புருஷராகிறார்.

- மகாத்மா பெற்ற மகத்தான இடம் இது.
- நாட்டின் நாடித் துடிப்பை அறிந்ததால் நாடு அவரை ஏற்றது.
- தவம் மோட்சம் தருவது.
- தவசிக்கு ஆத்மாவின் அந்தரங்கத் துடிப்பு தெரியும்.
- தவத்தைக் கடந்தது திருவுருமாற்றம்.
- திருவுருமாற்றம் என்பது மனிதன் பெறும் ஆத்ம விழிப்பு அவனை இயற்கையின் பிடியினின்று விடுவித்து அவன் எண்ணத்தால் செயலைப் பூர்த்தி செய்கிறது.
- எண்ணம் செயலாக பூர்த்தி பெறுவது பண்பால்.
- பண்பின் அடிப்படை கட்டுப்பாடு.
- நம்பிக்கை பண்பின் கட்டுப்பாடு.
- நம்பிக்கை முக்கியம், முக்கியமாக முக்கியம்.

## ஜீவிய மணி

நாமே முனைந்து அன்னை நினைவில்லாமல், சமர்ப்பணமில்லாமல் ஆரம்பிக்கும் காரியங்கள் சற்றுச் சிரமம் தரும். முனைப்பு அதிகமானால் சிரமம் அதிகமாகும். நான் அன்னை பக்தன் என்பதால் உயர்ந்தவன் என்ற நினைப்போ, உலகம் தாழ்ந்தது என்ற அபிப்பிராயமோ இல்லாமல், நமக்கு அமைந்த கடமைகளை அன்னை நினைவோடும் ஆத்ம சமர்ப்பணத்தோடும் செய்தால் அம்மனநிலை அன்னைச் சூழலை நாம் போகும் இடம் எல்லாம் கொண்டு வரும். நம்மால் சமாளிக்க முடியாத சூழலை அன்னை தரவே மாட்டார். அன்னை நிரம்பிய சூழல் நமக்கு அமிர்தமாக இனிக்கும்.



### அன்னை இலக்கியம்

## காலன் கரைந்தான்

இல. சுந்தரி

திருச்சியில் பிரபல ஹோட்டல் முதலாளி முத்துஸ்வாமி, சென்னையிலும் தன் தொழிலை விரிவுபடுத்த எண்ணி, நல்ல இடத்தில் பெரிய கட்டடம் ஒன்றை விலைக்கு வாங்க எண்ணியிருந்தார். சென்னையில் உள்ள இவரின் நம்பகமான நண்பர் பாரி, நல்ல இடம் ஒன்று, நாணயமானவர் விற்க இருப்பதை அறிந்து இவருக்குத் தெரிவித்தார். இவரும் இடத்தைப் பற்றி நன்கு விசாரித்துவிட்டு நேரில் பார்வையிட்டு மன நிறைவாக இருந்தால் தமக்கு உடனே தெரிவிக்கச் சொன்னார்.

இடத்தை விற்பவர் தமக்கு நன்கு தெரிந்தவர் என்றும் இடத்தின் பேரில் வில்லங்கம் ஏதும் இல்லை என்பதை நன்கு விசாரித்து அறிந்து விட்டதாகவும் உடனே பத்து இலட்சம் முன்பணம் கொடுத்து இடத்தைப் பிடிப்பது நல்லது என்றும் தெரிவித்திருந்தார். சென்னையில் ஜனசங்கமமான இடத்தில் இடம் பிடிப்பது கடினம் என்று இவர் நன்கு அறிந்திருந்ததால் தாம் பத்து இலட்சம் முன்பணத்துடன் நேரில் வருவதாகவும் இடத்தைப் பார்த்துவிட்டு முன்பணம் கொடுத்து பிறகு பத்திரப்பதிவிற்கு ஏற்பாடு செய்யலாம் என்றும் பாரிக்குத் தெரிவித்துவிட்டு மறுநாள் அப்பெரும் தொகையுடன் நம்பகமான டிரைவருடன் காரில் புறப்பட்டார். சென்னையை நெருங்க இன்னும் ஒரு மணி நேரமே உள்ள நிலையில், வழியில், ஒரு மக்கள் நடமாட்டமில்லாத பகுதியைக் கடக்கும் போது, திட்டமிட்டு வந்த நான்கு கொள்ளையர்கள் கத்தியைக் காட்டி மிரட்டவே, டிரைவரும், முத்துஸ்வாமியும் கதிகலங்கிப் போயினர். ஒருவன் முத்துஸ்வாமியின் வாயையும், கையையும் கயிற்றால் கட்டிவிட்டு காவலிருந்தான். ஒருவன் டிரைவரைக் கத்தியால் மிரட்டி பக்கத்துப் புதர் பக்கம் காரை ஓட்டச் செய்தான். அங்கு காரை நிறுத்தச் செய்து பணப்பெட்டியைக் கைப்பற்றி இருவரையும் கயிற்றால் கட்டிப் போட்டுவிட்டு

பெட்டியுடன் ஓரடி எடுத்து வைத்ததும் ரோட்டிலிருந்து ஓர் இளைஞர் இவர்களை நோக்கி வந்தார். வந்தவர் நாலுமுழ வேட்டியணிந்து, உடம்பை ஒரு துண்டால் போர்த்தியிருந்தார்.

கருணை பொழியும் கண்கள். இனிமையான குரலில், 'நில்லுங்கள்' என்றார். அதில் அதிகாரம் இல்லை. வன்முறையில்லை. ஆனாலும் கொள்ளையர்கள் அக்குரலுக்கு மதிப்பளித்து நின்றுவிட்டனர்.

ஒருவேளை இவர்தாம் அவர்கள் தலைவரோ! 'அதைக் கொடுங்கள்' என்று அவர்கள் கையில் இருந்த பணப்-பெட்டியைக் காட்டினார். இவர்பக்கம் திரும்பிய கொள்ளையரில் ஒருவன் கத்தியால் இவரைக் குத்தவந்தான். வண்டியில் இருந்த முத்துஸ்வாமியும், டிரைவரும் அதிர்ந்தனர். ஆனால் என்ன வியப்பு! அவர் மிரளவில்லை. அதே கருணை பொழியும் கண்களால் அவனை நோக்கினார். புன்னகை செய்தார். ஸ்ரீ கிருஷ்ணனின் ஆபரணங்களைத் திருடிய திருடன், பொருளையெல்லாம் போட்டுவிட்டு, ''கண்ணா! எனக்கு நீதான் வேண்டும்'' என்றது போல் கத்தியைக் கீழே போட்டு விட்டுக் கை கூப்பினான். நடக்குமா இது? ஆவேசத்துடன் அவரை நோக்கி வந்த மற்றவர்களும் அவர் அருகே வந்ததும் செயலற்று நின்றனர். அவர் அப்படி என்னதான் செய்திருப்பார்! அமைதியாகப் பெட்டியை அவரிடம் தந்து விட்டனர். 'சென்று விடுங்கள்' என்றார். கடுமையிழந்த கண்களுடன் திரும்பாமல் அப்படியே சில தொலைவு பின்னால் சென்றவர்கள் போய் விட்டனர்.

இளைஞர் இவர்களின் கட்டை அவிழ்த்துவிட்டு 'இந்தாருங்கள், இது என் பணம். பத்திரமாய் எடுத்துச் செல்லுங்கள்' என்றார் மிக இனிய குரலில். அந்தக் கண்களில், புன்னகையில், இனிய குரலில் ஏதோ சொல்ல முடியாத ஓர் ஈர்ப்பு இருந்தது. 'நன்றி ஐயா' என்று முத்துஸ்வாமி நெகிழ்ந்து கைகூப்பி அதைப் பெற்றுக் கொண்டு 'வாருங்கள் நீங்கள் எங்கே செல்ல வேண்டுமோ அங்கே காரிலேயே கொண்டு விடுகிறேன்' என்றார் பணிவுடன்.



'இருக்கட்டும். நான் வருகிறேன்' என்று எதுவும் கூறாமல் விரைந்து சென்று விட்டார். இவர் யாராக இருக்கும்! மிகவும் சாத்வீகமான இவரைக் கண்டு கொள்ளையர்கள் ஏன் பின்-வாங்கினர்? ஒன்றும் புரியவில்லை. ஒரு சில நிமிடங்களில் நடந்து விட்ட இந்நிகழ்ச்சிகளிலிருந்து மீள நேரமாயிற்று.

பிறகு அவர்கள் சென்னையை நோக்கி விரைந்து சென்று பாரி கூறிய அடையாளமுள்ள இடத்தை அடைய பாரி அங்குக் காத்திருந்தார்.

'வா. முத்து. உன்னை எதிர்பார்த்துத்தான் காத்திருக்கிறேன். இடத்தின் சொந்தக்காரர் நீ வந்ததைத் தெரிவிக்கச் சொன்னார். இங்குப் பக்கத்தில்தான் இருக்கிறார். போன் செய்தால் வந்து விடுவார். அதற்குள் காபி சாப்பிட்டு வரலாமா' என்றார் பாரி.

'இல்லை பாரி முதலில் இடத்தின் சொந்தக்காரரைப் பார்த்துப் பேசி விடுவோம்' என்றார்.

'சரி! அவருக்குப் போன் செய்து விடுகிறேன். அவர் வருவதற்குள் இடத்தைப் பார்க்கலாம்' என்று கூறி அவருக்குப் போன் செய்துவிட்டு, காரைப் பார்க் செய்துவிடு. இந்த இடம்தான் என்று அவர் காட்டிய இடம் பிரம்மாண்டமாய் உயர்ந்த தூண்களுடன் தெரிந்தது. வெளியே காவல் நின்ற கூர்க்காவிற்குப் பாரியைத் தெரியும் போலும். 'கதவைத் திற!' என்றதும் பிரம்மாண்டமான அதன் புறக் கதவைத் தள்ளித் திறந்தார். கட்டடத்திற்கு முன்புறம் பெரிய முகப்பு வாயில், இருபுறமும் பெரிய சுற்றுச் சூழல் இடம் காம்பவுண்டுடன். பெரிய முகப்புக் கதவு அழகிய பூ வேலைப்பாட்டுடன் அரண்மனைக் கதவு போலிருந்தது. கல்யாண மண்டபமாய்ப் பயன்பட்ட இடம். கதவைத் திறந்தவுடன் எவ்வளவு பெரிய ஹால். நூறுபேர் தாராளமாய் அமர பெரிய இடம். நேரே நடுநாயகமாய் இரண்டு திருவுருவங்களின் பெரிய படங்கள். ஊதுபத்தி மணக்க, பூத்தட்டுகள் சூழ இருந்தது. அருகே சென்று பார்க்கப் போன முத்து வியப்பால் விழிகள் விரிய, கண்ணீர் பனிக்க 'யாரிவர்?' என்றார்.

அதற்குப் பாரி, 'இங்கு ஓர் அன்னையன்பர் வாடகைக்குத் தியானக்கூடல் நடத்துவார். நேற்று இங்குத் தரிசன நாள் கூடல் நடந்தது. அவர்கள் இப்போது இவற்றையெல்லாம் எடுத்துப் போய்விடுவார்கள்' என்றார்.

'விபரமாய் சொல். என்ன தியானக் கூடல்? இப்படத்தி-லுள்ளவர்கள் யார்?' என்று ஆர்வத்துடன் கேட்டார். அப்போது கூடல் நடத்திய அன்பர் வரவே, 'தியாகு இவர்தான் இந்த இடத்தை வாங்க வந்திருக்கும் முத்துஸ்வாமி. உன் தியானக் கூடல் விபரம் சொல்' என்று அவரிடம் அறிமுகம் செய்து வைத்தார் பாரி. இருவரும் கைகூப்பி அறிமுகம் செய்து கொண்டனர்.

'இவர்கள் ஸ்ரீஅன்னை, ஸ்ரீஅரவிந்தர். பூவுலகிற்குச் சத்திய ஜீவியம் என்ற அதிமானஸத்தைத் தம் பூரணயோகத்தால் கொண்டு வந்தவர்கள். ஞாயிறு தோறும் இங்குக் கூடல் நடக்கும். அதில் இவர்களுடைய உயரிய இறைமயமான கோட்பாடுகளை பகிர்ந்து கொள்வோம். இவர்களை நோக்கித் தியானம் செய்வோம். பத்து ஆண்டுகளாக நடக்கிறது. நிலையான இடம் கிடைக்காததால் இப்படி மாற்றி மாற்றி வாடகைக்கு இடம் எடுத்துச் செய்கிறோம். இவர்களுடைய அளப்பரிய ஆன்மீகச் சக்தியை நாம் ஏற்றுக் கொள்வதற்கு இவர்கள் நம் பொருட்டுச் செய்த செயல்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நம் ஆன்மாவை விழிக்கச் செய்து நம் வாழ்வை அற்புதங்கள் நிறைந்த வாழ்வாக மாற்றுவதற்கு நம்மிடையே மானுடமாய் வந்தவர்கள்' என்று உருக்கமாய்ப் பேசினார் தியாகு.

'இது என் பணம் பத்திரமாய் எடுத்துச் செல்லுங்கள்' என்றாரே அவர்தாம் இவர் என்று ஸ்ரீஅரவிந்தரை அவர் உள்ளம் புரிந்து கொண்டது. அந்தப் புன்னகை. கருணை தவழும் கண்கள் இதோ இவர்தாம் வழியில் வந்து தங்களைக் காப்பாற்றியவர் என்று நன்றாகவே புரிந்தது.

'பாரி வெளியே என் டிரைவர் இருப்பார் அவரைக் கூப்பிடு' என்றார் முத்துஸ்வாமி.



உள்ளே வந்த டிரைவர் 'ஐயா கூப்பிட்டீங்களா' என்று வாயில்புறம் நின்றார்.

'வா வா இங்கே வா. இவரை எங்கேனும் பார்த்த நினைவு வருகிறதா' என்றார் மிகுந்த ஆர்வத்துடன்.

'ஐயா, இவர்தாம் வழியில் கள்வர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்றியிருக்கிறார். ஆமாம் ஐயா, அவர் இப்படியே-தானிருந்தார். அந்தக் கண்கள், அப்படியே இவர்தாம்' என்று மிகுந்த வியப்புடன் கூறி உடனே கீழே விழுந்து வணங்கினான்.

அதுவரை மெய்ம்மறந்திருந்த முத்துஸ்வாமியும் உடனே நமஸ்கரித்தார்.

'பாரி வரும் வழியில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. நினைத்தாலே எனக்கு உடம்பு சிலிர்க்கிறது என்று நடந்தவற்றைக் கூறி இது என் பணம் பத்திரமாய் எடுத்துச் செல்லுங்கள்' என்று அவர் கூறியது எனக்கு விளங்கிவிட்டது என்றார். ஒருவர்க்கும் ஒன்றும் புரியவில்லை. கூடல் நடத்தும் அன்பரிடம் 'சிறிது காத்திருங்கள்' என்றார். இடத்தின் சொந்தக்காரர் வந்தார்.

பாரி இருவரையும் அறிமுகப்படுத்தினார். 'இடம் பிடித்திருக்கிறதா?' என்றார் சொந்தக்காரர்.

'இடமும் பிடித்திருக்கிறது, மனதில் இது இடமும் பிடித்துவிட்டது' என்றார்.

சொந்தக்காரர் அன்பரிடம், 'இவர்தாம் இடத்தை வாங்குபவர். நீங்கள் விரைவில் இடத்தைக் காலி செய்து விடுங்கள்' என்றார்.

'இல்லையில்லை காலி செய்யத் தேவையில்லை. நான் ஹோட்டல் கட்டப் போவதில்லை. தொடர்ந்து கூடலே நடக்க இந்த இடத்தை என் பிரபுவுக்காக (ஸ்ரீஅரவிந்தருக்காக) வாங்கப் போகிறேன்' என்றார்.

(இருங்கள் இருங்கள் கதை இன்னும் முடியவில்லை.)

குதிரை வாங்கச் சென்ற மணிவாசகர் கோயில் கட்டிய கதையாக ஹோட்டல் கட்ட இடம் வாங்க வந்த முத்துஸ்வாமி ஸ்ரீஅரவிந்தரால் தடுத்தாட்கொள்ளப்பட்டு வாங்கிய இடத்தை நிரந்தர தியான மையமாக மாற்றியதுடன் திருச்சியில்

ஹோட்டலை தன் மகன் பெயரில் மாற்றி அவனிடம் ஒப்படைத்ததுடன் குடும்பத்தினின்றும் பிரிந்து சென்னையில் தியான மையத்திலேயே தங்கி விட்டார். தாம் இனி பகவான் சேவையில் ஈடுபடப்போவதாயும் குடும்பப் பொறுப்பை மகனே ஏற்க வேண்டும் என்று விலகி விட்டார். இவர் மனைவி மட்டும் இவருடன் இருப்பதே தனக்குச் சரி என்று சென்னை வந்து விட்டாள்.

வாடகை இடம் வாங்கி பல இடங்களில் மையம் நடத்திய அன்பர், முத்துஸ்வாமியின் பக்தியால் மையத்திற்குச் சொந்தக் கட்டடம் அமைந்ததால் மகிழ்ந்து பல புத்தகங்களை அவருக்குக் கொடுத்தார். தியான மையக் கட்டடத்தில் தம் மனைவியுடன் முத்துஸ்வாமி நிரந்தரமாய்த் தங்கி பணக்கார தோரணை ஏதுமின்றி அடக்கமாகத் தொண்டு செய்து வந்தார். மைய அன்பர்கள் யாவரும் இவருடன் இணைந்து பணி செய்வதில் மகிழ்ந்தனர்.

தம் பழைய பணக்கார வாழ்க்கைக்கு மரித்துப் போய் அன்பர் என்று புதிதாய் பிறந்தார் முத்துஸ்வாமி. மையத்தின் வளர்ச்சிக்கும் தூய்மைக்கும் ஓயாது பாடுபட்டார். தோட்டம் அமைத்து பூஞ்செடிகளுக்கு நீர்வார்த்து பூக்கொய்யும் புனிதப் பணியையும் இவரே செய்தார். அதிகாரமாய் வாழ்ந்த தன் கணவர், அடக்கமாய் வாழ்வது கண்டு இவர் மனைவி வியந்தாள்.

இவர்தம் பக்தியாலும், பணியாலும் அன்பர்கள் யாவருக்கும் உற்ற நண்பராகி விட்டார். ஒரு நாள் எதிர்பாராது நெஞ்சுவலி ஏற்பட, ஒன்றும் செய்ய இயலாதவரானார். பேச்சு நின்று நினைவு இழந்தார். அன்பர் குழாம் இவரை நகரத்தின் உயர்தர மருத்துவமனையில் சேர்ப்பித்தது. இவர் மனைவி ஸ்ரீ அரவிந்த அன்னையை பிரார்த்தித்த வண்ணமிருந்தார். திருச்சியிலிருந்து இவர் மகன், மருமகள், பேரக்குழந்தைகள் யாவரும் வந்து விட்டனர்.

மருத்துவர் அவர் நிலைமை கவலைக்கிடமானது என்று கூறி தீவிர சிகிச்சை அளித்தவண்ணம் இருந்தனர். இவர்



பக்திபூர்வமாக மையப் பணிகளில் ஈடுபட்டதையும், தம்மை விட வயதில் சிறியவர்களானாலும் பகவான் நூலைப் பயின்றவர் கூறும் உரைகளை அடக்கமாய் கேட்டதையும் எண்ணி அன்பர் குழாம் இவர் நலனுக்காக ஸ்ரீஅன்னை, பகவானைப் பிரார்த்தித்த வண்ணம் இருந்தது. ஓரன்பர் இவர் பொருட்டு அன்னை அழைப்பு என்ற முறையை மேற்கொண்டார். ஓரன்பர் இவர் நலம் பெற சாவித்ரி காப்பியத்தில் எமன் கரைந்த பகுதியைப் பக்தியுடன் படித்தார். ஓரன்பர் மூன்று நாள் பிரார்த்தனையை மேற்கொண்டார். இவை பற்றி அதிகம் தெரியாத உறவினர்கள் பாசத்தால் பதற்றமடைந்தனர்.

இவருடன் மையப் பணிகளில் ஈடுபட்ட இவர் மனைவி மையச் சொற்பொழிவுகளைக் கேட்ட அனுபவத்தில் சமர்ப்பணமே சரி என்று எவ்வித பதற்றமும் இன்றி அன்னை பகவான் முன் அமைதியாக இருந்தார்.

இதற்கெல்லாம் எதிராக மருத்துவர்களோ கணத்திற்குக் கணம் இவரிதயம் செயலிழப்பதாயும் பிழைத்தல் அரிது என்றும் கூறிய வண்ணமிருந்தனர். மருத்துவமனையில் அவருக்கு நினைவு தவறிய வண்ணமிருந்தது.

மேலுலகில் யமதர்மன் சபையில் சித்ரகுப்தர் என்றழைக்கப்படுபவர் அன்றைய நாளில் ஆயுள் முடியும் ஜீவர்களின் வரிசையைக் கூறியவண்ணமிருந்தார். இன்னும் அரைமணியில் பூவுலகில் மருத்துவமனையிலுள்ள முத்துஸ்வாமியின் உயிர் கவரப்பட வேண்டும் என்பதைச் சித்ரகுப்தர் கூற, காலன் தூதுவர்களை அழைத்துக் கட்டளை இடுகிறான். அவர் உயிருக்குப் போராடும் கட்டத்திலிருப்பதால் அதுவே காரணமாக அவர் உயிரைக் கவர்ந்து வரக் கூறுகிறான்.

இரண்டு யமதூதர்கள் சூட்சும வடிவில் முத்துஸ்வாமியின் முன் தோன்ற, முத்துஸ்வாமியும் தம் சுயநினைவு தவறும் நிலையில் அவர்களைப் பார்க்கிறார். தன்னைத் தடுத்தாட்கொண்ட பிரபுவை அவர்தம் நெஞ்சப் பேழையில் பூட்டி வைத்திருப்பது அவருக்கே இப்போது நினைவில்லை.

தூதுவரில் ஒருவன் பாசக்கயிற்றை அவர்மீது வீச முற்படும் போது, யாரோ அவனைப் பின்னால் இழுப்பதாக உணர்கிறான். அவனால் உயிரைக் கவர முடியவில்லை. மற்றவனோ ‘என்ன தயங்குகிறாய். நம் தலைவருக்குத் தெரிந்தால் கோபப்படுவார். சீக்கிரம் ஆகட்டும்’ என்கிறான்.

‘நீ முயற்சி செய்துபார் என்னால் முடியவில்லை. என்னை யாரோ பின்னால் இழுப்பது போல் உணர்கிறேன்’ என்றான் இவன்.

மற்றவனும் முத்துஸ்வாமியின் மேல் பாசக் கயிற்றை வீச, அவனும் முத்துஸ்வாமியின் உயிரைப் பறிக்க இயலாது தோற்றான். ‘என்ன இது! புதுமையாய் உள்ளது’ என்று இருவரும் பேசிவிட்டு, ‘தலைவருக்குத் தெரிந்தால் நம்மைத் தண்டித்து விடுவார். விரைவில் சென்று அவரிடம் நிலைமையைக் கூறிவிடுவோம்’ என்றான் ஒருவன். ‘ஆம் வா வா. உடனே செல்வோம்’ என்றான் மற்றவன்.

யமதர்மன் முன் சென்று இரண்டு தூதுவர்களும் தலை குனிந்து நிற்க,

‘என்னாயிற்று? எங்கே நீங்கள் கவர்ந்த உயிர்?’ என்று காலதேவன் கர்ஜித்தான்.

‘மன்னிக்க வேண்டும் பிரபு. எங்களால் அவ்வுயிரை நெருங்கவும் முடியவில்லை’ என்று ஏககுரலில் கூற, யமன் இருக்கையை விட்டுச் சினத்துடன் எழுந்து, ‘என்ன’ என்று கடுமையாய்க் கூறி முறைக்க, ‘ஆம் பிரபு உம்மிடம் கூறவே விரைந்து வந்தோம். இத்தனை காலத்தில் இப்படி எதுவும் நேர்ந்ததில்லை’ என்றனர்.

உடனே காலத்தின் தலைவன் முத்துஸ்வாமியின் முன் தோன்றினான். உள்ளங்கையை விரித்து அவர்முன் நீட்டி உயிரைக் கவரத் தொடங்கியதும் பின்புறமாக இழுக்கப்பட்டான். ‘என்ன? என்ன விந்தையிது? யார் என் கடமையைச் செய்ய விடாமல் என்னைத் தடுப்பது?’ என்று சினந்தான்.



‘நீ யார்? ஏன் என்னைத் தடுக்கிறாய்?’ என்று முத்துஸ்வாமியை நோக்கிக் கடுகடுக்கிறான்.

மயக்க நிலையிலிருந்த முத்துஸ்வாமிக்கு தன் முன்னே ஒரு பயங்கர உருவம் நின்று தன்னை மிரட்டுவது தெரிகிறது.

‘யார்? நீ யார்?’ என்று நடுங்கும் குரலில் கேட்கிறார்.

‘யாரா? நானா? நானே காலதேவன் உன் ஆயுள் முடிந்து காலமும் கடந்து விட்டது. என்னுடன் வர ஏன் மறுக்கிறாய்?’

‘ஆம் நான் உம்முடன் வர விரும்பவில்லை’.

‘உன் விருப்பத்திற்கு என் கடமையில் இடமில்லை. புறப்படு வா என்னுடன்’

‘இல்லை. நான் வரமாட்டேன். என் வாழ்நாள் புனிதப்படும் இந்நேரத்தில் என்னால் வரமுடியாது’.

‘என்னிடம் வரமுடியாது என்று சொல்ல உனக்கு என்ன துணிச்சல்’ என்று சீறி கையை விரித்து முன்புறம் நீட்டி அவர் உயிரைக் கவர முயன்ற போது பின்புறம் சரிகிறான் காலன். ‘என்ன இது! யார் என்னைத் தடுப்பது? நீ யார்? என்ன மாயம் செய்கிறாய்? கேவலம் ஒரு மனிதனிடமா நான் தோற்கிறேன்’ என்று கர்ஜித்தான் காலன்.

‘மாயமா? நானேதும் அறியேன். நான் எளிய மனிதன். என்னிடம் எந்தச் சக்தியும் கிடையாது. என்னை விட்டுவிடு. நான் செய்ய வேண்டிய நன்றிக் கடன் நிறையவுள்ளது’.

‘அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் கடமையில் தவறாத என்னைத் தவற வைக்கும் மாயம் ஏதோ உன்னிடமுள்ளது. என்ன மந்திரம் அது? சொல்லி விடு’.

‘மந்திரமா? என்னிடமா? என்னைத் தடுத்தாட்கொண்ட ஸ்ரீ அரவிந்தரின் சக்தியாகிய அன்னையைத் தவிர ஒரு மந்திரமும் நான் அறியேன்’.

‘அன்னையா? யாரவர்?’ கடுமையாகக் கேட்கிறான் காலன்.

‘பராசக்தி அன்னையைத் தெரியாதவர் உளரா என்ன?’

‘பராசக்தியா? பரமனின் உத்தரவின் பேரில்தான் என் பணியே நடைபெறுகிறது. இதில் பராசக்தி எப்படித் தடை செய்வார்? முன்பு மார்கண்டேயனின் உயிரைத் கவர்ந்த போது கூட பரமன் காட்சி தந்துதான் தடுத்தார். இப்போது உன்னிடம் அவர் கூட இல்லையே’ என்று ஐயப்பட்டான் காலன்.

பகவான் போர்க்களம் செல்லாமலும் போர்க்கருவி ஏந்தாமலும் உலகப்போரை வென்ற செய்தி காலன் அறியவில்லை போலும்.

மிகுந்த பரபரப்புடன் காலன் விரைந்து சென்று பரமன் முன் சென்று வணங்கி நின்றான்.

‘என்ன காலதேவா, தொழிலில் ஏதாவது சிக்கலா?’ என்று புன்னகைத்தான் பரமன்.

‘ஆம் பிரபு! பூவுலகில் ஒருயிரைக் கவர முடியாத என் பரிதாப நிலை கூறவந்தேன்’. என்று தலை கவிழ்ந்தான் காலன்.

‘உன் பணியில் நீ சிறந்தவனாயிற்றே. அப்படியுமா சிக்கல்?’ என்றார் பரமன்.

‘ஆம் பிரபோ, கடமை தவறாத என்னை ஒருவன் என் கடமையைச் செய்ய விடாமல் தடுக்கிறான். அவனிடமுள்ள மாய சக்தி இன்னது என நானறியேன்’.

‘அவனிடமே கேட்பதுதானே?’ ‘ஆம் பிரபு! கேட்டேன் அவன் தனக்கு எந்த மந்திரமும் தெரியாது’ என்கிறான்.

‘ஓ! அப்படியொரு சாமானியனையா உன்னால் தீண்ட முடியவில்லை?’ என்று சிரிக்கிறார் பரமன்.

‘ஆனால் அவன் தனக்கு அன்னை என்ற நாமம் மட்டுமே தெரியும் என்கிறான்’.

‘அப்படியா? சரி. அப்படியென்றால் இங்கே (பராசக்தியைக் காட்டி) சக்தியிடம் கேள்’. என்றார் பரமன்.

‘தேவி! எனக்கு நேர்ந்த துன்பத்தைத் தீர்க்கமாட்டீரா’ என்று தேவியை நோக்கிப் பணிந்து கேட்கிறான் காலன்.

‘என்ன நேர்ந்தது! காலதேவா?’ என்கிறார் பராசக்தி.



‘தாயே! காலம் தவறாதவன் என்று பேர் எடுத்தேன். கடமை தவறாமலும் நடந்து வந்தேன். சிறியவர், பெரியவர் என்று வேறுபாடு கருதியதில்லை. ஏழை, செல்வந்தர் என்ற வேறுபாடும் பார்த்ததில்லை. எதற்கும் அஞ்சாது என் கடமையைச் செய்தேன். தர்மராசா என்று பேர் பெற்றேன். பிரபஞ்சம் முழுவதும் ஊழல் நடமாடும் இக்காலத்திலும் நான் மட்டும் என் தொழிலைச் செம்மையாய்ச் செய்தேன். ஆனால் இன்று .....’ என சோகமாய் முடித்தான்.

‘கடமையில் சிறந்தவன், அஞ்சாதவன் உன்னைப் போல் யாருமில்லை என்றெல்லாம் உனக்கு உன்னைப் பற்றி பெருமை அதிகம்’ என்று நகைத்தாள் தேவி.

சற்று நாணினான் காலன்.

‘உன் கர்வம் அடங்கி விட்டதா இப்போது?’ என்றாள் மேலும்.

கம்பீரமாய் வந்த காலன் குறுகிப் போனான். ‘தேவி, நீர் என்ன கூறுகிறீர்?’ என்று தயங்கினான்.

‘ஆம் காலதேவா. உன் பணியில் நீ உண்மையானவன்தான். ஆனால் காலப்போக்கில் உன்னை இயக்கும் சக்தியையே மறந்து நீயே யாவும் என்று மயங்கி விட்டாய். என்னிடம் ஒன்றுமில்லை எனக்கெதுவும் தெரியாது என்று என்னைச் சரணடைந்த சாமான்யனிடம் நீ தோற்று விட்டாய்.’ என்றாள் தேவி.

‘தாயே, நான் தவறிழைத்தேனா?’ என்று பணிந்தான் காலன்.

‘ஆம் காலதேவா. நீ என்ற ஒன்றை நான் என்றோ கரைத்து விட்டேன். பூவுலகில் உன்னாட்சி முற்றுப் பெறும் நேரம் வந்துவிட்டது. இனி அவர்களே அவர்களை விடுவித்துக் கொள்வார்கள்’.

காலன் கரைந்தான்.

மையத்தில் அன்பர் ஒருவர், முத்துஸ்வாமியின் பொருட்டு, ஸ்ரீ அரவிந்த காப்பியம் சாவித்ரியிலிருந்து, ஸ்ரீஅன்னை காலனைக் கரைத்த பகுதியை உருக்கமுடன் படித்துக் கொண்டிருந்தார்.

மருத்துவம் தோற்றது. கருவி இயங்க மறுத்து நின்று விட்டது.

நோயாளி இறந்துவிட்டார் என்று மருத்துவர்கள் எண்ணியபோது, முத்துஸ்வாமி உறங்கி எழுந்தது போல் கண்விழித்தார். மருத்துவர்கள் வியந்தனர். இது என்ன மாயம். இதய இயக்கம் நின்று, நாடி விழுந்து முற்றிலும் முடிந்து போன அவர் கதையை அன்னை மீண்டும் எழுதினார் என்பதை அவர்கள் அறியவில்லை.

அன்பர்கள் அறிந்ததால், அன்னையே என்று எழுந்து, ''எனக்கு என்னாயிற்று எங்கிருக்கிறேன்!'' என்ற அவரை அன்பர்கள் சூழ்ந்து மகிழ்ந்தனர்

### ஜீவிய மணி

திருவுருமாற்றத்தை முதற்பலனாகத் தருவது சரணாகதி, அது அடக்கத்திற்குரியது. நாம் நல்லது வேண்டும். கெட்டது வேண்டாம் என்கிறோம். ஒரு நாணயத்தின் தலை மட்டும் வேண்டும் என்றால் நாணயமில்லை. தங்கச் சுரங்கத்தில் தங்கம் கனிப்பொருளாக இருக்கிறது. கனிப்பொருளை சுத்தம் செய்து, உருக்கி தங்கம் பெறவேண்டும். தங்கம் வேண்டும், கனிப்பொருள் வேண்டாம், எனில் தங்கமில்லை. ஞானம், அஞ்ஞானமானதால், இனி ஞானம் அஞ்ஞானத்திலிருந்து எழ வேண்டும். அஞ்ஞானத்தை ஒதுக்கினால் எதிலிருந்து ஞானம் வரும்? ஞானம் வருவது தடைப்படும். ஏழ்மையை ஒதுக்கினால் செல்வம் எப்படி ஒதுக்கப்படும் எனலாம். ஏழை பணக்காரனாகாவிட்டால் நாடு ஏழையாக இருக்கும்.



## பக்குவமான பவித்திரம்

கர்மயோகி

அன்னையை அறிந்தவர் ஆழ்ந்து மகிழ்ந்தால் அதுவே பக்தியாகும். எளிய மனித வாழ்வில் தேவைகள், குறைகளிருப்பதால் மனம் அவற்றை விட்டு எளிதில் அகலாது. ஆழ்ந்த மன உறுதியும், அபரிமிதமான பாரம்பரியமும், அளவு கடந்த நல்ல மனமும் உடையவர் மனத்திலிருத்த வேண்டிய ஆன்மீக எண்ணங்கள்,

- உள்ளத்து உண்மை உடனே சாதிக்கும், இதுவரை சாதித்தது உள்ளத்து உண்மையைக் காட்டுகிறது.
- மனம் அறிவால் முடிவு செய்தால் அந்த உண்மையை எந்த அளவும் உயர்த்தலாம்.
- நாம் முயன்று உயர்த்தினால், அது தானே உயர ஆரம்பிக்கும்,
- உயர்வது எல்லா நிலைகளிலும், எல்லா வகைகளிலும் வளர்ந்தபடியிருக்கும்.
- சௌக்கியம் சந்தோஷமாகும், அன்பு அனந்தமாகும், இனம் புரியாத இன்ப நினைவால் இறைவன் நம்மை அகத்திலும் புறத்திலும் தீண்டுவான், ஸ்பர்சம் புனர்ஜென்மம், தீண்டுவது திருவடி.
- மனம், குணம் என்ற சிறையின் பிடி தளருவதை உணரும்,
- தளரும் பிடி வளரும் சொர்க்கம்,
- எதிரொலியாய் வாழ்வு இரவும் பகலும் இன்பமயமாய் எழும்,
- அனுபவம் நினைவாய் எழுவது ஆனந்தமாக மாறி மலரும்,
- பெற்றோர் செய்த புண்ணியம் பெரும் செயலாய் இன்று காட்டும்,
- நாமே பெற்ற பிள்ளைகள் ஆத்ம வரம் பெற்ற அற்புதமாவார்கள்,
- அன்பரின் பக்குவம் அன்னையின் மகிமையை மகான்களும் பெறச்செய்யும்,

- ‘பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்’ என்ற வாக்கு பலிக்கும்,
- திரௌபதியின் துகிலாக பெண்ணொளி வளரும்,
- பஸ்ஸில் இடம் கிடைக்காமல் காரில் பயணம் நிறைவேறும்,
- தேடிப்போனால் கிடைக்காதவர் நாடி வரும் மாற்றம் தெரியும்,
- **ஏமாற்றியவர் வலிய வந்து நாம் ஏமாறாதபடி உதவுவார்,**
- கடந்தவை வரம், வரவேண்டியதெல்லாம் வாய்ப்பாகும்,
- பழைய பெருமை திருவுருமாறி புதிய வாழ்வின் அந்தஸ்தாகும்,
- **உடல் நலம் உள்ள நலம்**: வலிமை மிகுந்து ஆயுள் நீடித்து உள்ள வயது பாதியாக செயல்படும்,
- கையிலுள்ள ரூபாயெல்லாம் டாலர் மதிப்பு பெறும்,
- **எந்த நேரமும் உள்ளே போனால், உள்ளம் உச்ச கட்டத்தில் இருக்கும்,**
- மனம் தியான மையமாகும்,
- தியானம் திகட்டாது, தியானமே திருவுருமாறி சமர்ப்பண-மாகும்,
- ரிஷ்ய சிருங்கர் போல போகும் இடமெல்லாம் புதிய ஒளி பரவும்,
- எதிர்ப்பு, குறை, நோய், வம்பு, வழக்கு தம் குணத்தை ஆதரவாக, நிறைவாக, உடல் நலமாக, பாராட்டாக, நியாயமாக மாற்றி அமைத்துக் கொள்ளும்.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# தும்மல்

தும்முவது அபசகுனம். தும்மினால் காரியம் கெட்டு விடும் என நாம் நம்புகிறோம். உடல் உணர்ச்சியை மீறி செயல்பட நினைத்தால் தும்மல் வரும் என்பது மெடிக்கல் படிப்பு கூறுவது. அதன்படி மரபின் நம்பிக்கை சரி. உணர்ச்சியால் முடியாததை உடல் செய்ய ஆரம்பித்தால் அது கெடும் என்பது சரி. அன்பர் நிலையென்ன?

அன்னை தரும் வாய்ப்பை நம் உடலும், உயிரும் ஏற்க முடியாது. அதனால் அன்னையின் வாய்ப்பை நினைத்த-வுடன் தும்மல் வரும். தும்மல் புது பெரிய வாய்ப்பு எனப் புரிந்தவுடன் தும்மல் நின்று விடும். அதனால் இந்த வாய்ப்பு பலிக்கும். வாய்ப்பைக் கொடுத்த அன்னைக்கு நன்றியை உணர்ந்தால், உடல் பரந்து உணர்ச்சி விரிந்து, இதயம் மலரும். நன்றி தொடர்ந்த நன்றியானால், நன்றியால் எழும் ஆர்வம் அழைப்பானால், அழைப்பு அமிர்தமாக ஊற்றெடுக்கும்.

அந்நிலை நின்று நிலைத்தால் வந்த வாய்ப்பு
பலித்துப் பெருகி, வளர்ந்து செழிக்கும்.

தும்மலைப் பற்றி மரபு கூறுவது சரி.

தும்மலுக்குப் புதிய விளக்கம் உண்டு.

புதிய விளக்கம் புதிய வாய்ப்பு.

அன்னை தரும் புது ஆன்மீக வாய்ப்பு.

# பாசமும் பரிசும்

குழந்தைகட்கு, உறவினர்கட்குப் பரிசு தரும் நல்ல பழக்கம் நம்மவரிடம் உண்டு. நடைமுறையில் அதைக் கடைப்-பிடிப்பது நேரம், காலம், சந்தர்ப்பம், அந்தஸ்த்தைப் பொறுத்து நடக்கும். அதை மனதில் பழக்கமாக இல்லாமல் இலட்சியமாக ஏற்பவரும் உண்டு. 1949-இல் ரூபாய் 124/- சம்பளத்திற்கு சர்க்காரில் சேர்ந்தவர் 1969-இல் 600 ரூபாய் சம்பளம் பெற்றார். அவரது இரு அண்ணன், இரு தமக்கைகட்கு 18 குழந்தைகள். அவர்களைப் பார்க்க வந்தால் தவறாமல் பரிசு தருவார். பேனா, புத்தகம், பந்து, டிரஸ் என பரிசு அமையும்.

20 ஆண்டுகள் சர்வீஸ் முடிந்தபொழுது ‘‘நான் இதுவரை என் உறவினர் சிறுவர்கட்கு Rs. 50,000/- பரிசு கொடுத்-திருக்கிறேன்’’ என்றார். பரிசு தரும் மனம் பரநலம் விழையும் உள்ளம். எந்த ஒரு நல்ல குணத்தையும் உச்சகட்ட அளவில் (perfect) உயர்த்துவது வாழ்வுக்கும் ஆத்மாவுக்கும் உரிய நல்ல குணம்.

குணத்திற்கேற்ற வாழ்வு அமைவது பொது.

- சிறு நல்ல குணத்திற்குப் பெரு ஆத்ம ஞானம் வருவதும் உண்டு.
- மனிதனுடைய மனம் மனைவியின் செயலில் பிரதிபலிக்கும்.
- கர்மம் என்பது வலிமையானது என்பது மரபு.
- கடந்த செயல் இன்றைய வாழ்வில் பலனாகத் தெரிந்தாலும், அது இலாப நஷ்டக் கணக்காக இராது என்று பகவான் கூறுகிறார்.
- நல்லதைச் செய்ய மனம் நாடுவது நல்லது.
- பலன் எதுவானாலும் நல்லது, நல்லதே.